Registered as a NewsPaper

வாழ்ப்பாணம்

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12150)

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-26 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 142

## இளநிலை அதிகாரிகள் பயிற்சி நிறைவு நிகழ்வில் தேசியத்தலைவர்





விடுதலைப் புலிகளின் போர்ப்படையணிகளின் இளநிலை அதிகாரிகளின் பயிற்சிநெறி நிறைவு நாளில் தேசியத் தலைவர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். இளநிலை அதிகாரிகள் பயிற்சிநெறி மாணவப் போராளிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பயிற்சிநெறியை நிறைவு செய்த போராளிகளிற்கான சான்றிதழ்களையும், அதில் சிறப்பாகச் செயற்பட்ட போராளிகளிற்கான பரிசில்களையும் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார். இதன் போது பயிற்சி நெறிகளை வழங்கிய ஆசிரியப் போராளிகளும் சிறப்பு பரிசில்கள் வழங்கி தேசியத் தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர்.

## தமிழீழ தேசியத் தொலைக்காட்சி செய்தியாளரை கொலை செய்ய இராணுவ புலனாய்வாளர் முயற்சி

### அம்பாறையில் நேற்று முன்தினம் சம்பவம்

(அம்பாறை)

*அம்பாறையில் தமிழீழ தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரை கடத்திச் சென்று கொலை செய்ய சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் முயற்சித்துள்ளனர். எனினும் மக்கள் ஒன்று திரண்டு இதனை முறியடித்துள்ளனர். நேற்று முன்தினம் பிற்பகல் அம்பாறையில் வைத்து தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் வெற்றிக்குமாரினை கைது செய்து கைகளைக் கட்டிவிட்டு சுட்டுக் கொல்வதற்கு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் முயன்றுள்ளனர்.*

அவ்வேளை அங்கு கூடிய மக்கள் கூக்குரலிடவே அவரைத் தூக்கிச் சென்று வாகனமொன்றில் ஏற்றி கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர். எனினும், குறித்த செய்தியாளர் அவர்களிடம் இருந்து தப்பி ஓடியிருக்கின்றார். அவ்வேளை அவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும் அவர் அதிலிருந்தும் தப்பிச் சென்று அம்பாறை அரசியல்துறை அலுவலகத்தில் தஞ்சமடைந்திருக்கின்றார்.

கடந்த சில நாட்களாக விசேட அதிரடிப்படையினர் அம்பாறையில் உள்ள தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் செய்தியாளர்கள் தங்கியுள்ள வீட்டை தமது பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை புத்தர் சிலை குறித்து கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு!

(வவுனியா செய்தியாளர்)

ஓமந்தை புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக ஓமந்தைப் பிரதேச பொது மக்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வைரவப் புளியங்குளத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் நடைபெற்ற ஓமந்தை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான கலந்துரையாடலிலேயே பொது மக்கள் இவ்வாறு முறையிட்டுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட பிரதித் தலைவர் நன்னி அவர்களிடம் பொது மக்கள் முறையிட்ட போது அவர் இவ் விவகாரம் நீதிமன்றத்திற்கு சென்றுள்ளமையால் பொதுமக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியமாகாண முன்னாள் அமைச்சர் உட்பட நான்குபேர் நேற்று முன்தினம் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் விவசாய அமைச்சர் எம்.டி. அமீர் உட்பட நால்வர் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சீருடையில் இருந்தவர்களே இக்கொலையினைப் புரிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பு கறுவாத்தோட்டம் பகுதியில் ஜீப்வண்டி ஒன்றினுள் கொலை செய்யப்பட்ட நிலையில் இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். இரவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கறுவாத்தோட்ட பொலிசார் இந்தச் சடலங்களை நேற்று அதிகாலை 2.15 மணியளவில் கண்டுபிடித்தனர்.

உயிரிழந்தவர்கள் தொடர்பான மரண விசாரணைகள் நேற்று நடைபெற்றன.

மத்தியமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பல தேயிலைத் தோட்டங்களின் உரிமையாளர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் கூட்டமைப்பு அரசாங்கம் மக்களின் வாழும் உரிமையை மறந்துள்ளது

### -எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமையான வாழும் உரிமையை மறந்துள்ளதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சக்திப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாறான அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமானது. வாழ்க்கைச் செலவைக் குறைப்போம், எரிபொருள் விலையைக் குறைப்போம், ஒரு இலட்சம் வேலைவாய்ப்புக்கள் பெற்றுக்கொடுப்போம், பட்டதாரிகளுக்கு 40 ஆயிரம் தொழில் வாய்ப்புக்களை அரசு துறையில் பெற்றுக்கொடுப்போம் என்று உறுதியளித்து பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### காணிவிற்பனைக்குண்டு

வள்ளிபுனம் சந்திக்கருகாமையில் தென்னங்கன்று மற்றும் பயன் தரு மரங்களுடன் 2ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு. வாணி நகைமாடம், கனகபுரம், கிளிநொச்சி. (6332)

### விற்பனைக்குண்டு

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 5kv தொடக்கம் 100kv வரையான மின் பிறப்பாக்கிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: 0777111886 (6342)

### தவறிவிட்டது

04.07.2005 அன்று விசுவமடுவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் லோகநாதன் இராஜராஜேஸ்வரி என்பவரின் பங்கீட்டு அட்டை, நிவாரண முத்திரை, வெள்ளைக்காட் என்பன பொலித்தீன் பையுடன் தவறிவிட்டது. இதைக் கண்டுடெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது கரைச்சி வடக்கு புன்னைநீராவி கிளையிலே கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல்:- ப.அமுதன் (6346)


# கிளி.விவேகானந்த நகரில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருடர் கைவரிசை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகாந்த நகரில் ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன

விவேகானந்த நகரில் சிறிமுருகன் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை அருகிலுள்ள மூன்று வீடுகளிலேயே இத்திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 3.00 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சதிஸ்குமார் என்பவரின் வீட்டில் இருந்து 45000/= ரூபா ரொக்கப் பணமும் எட்டுபவுண் தங்க நகைகளும் திருடப்பட்டுள்ளது. மற்றையவீட்டில் மூன்று வயதுச் சிறுமியின் கழுத்தில் இருந்த இரண்டு பவுண் பெறுமதியான சங்கிலியும் களவாடப்பட்டுள்ளது. மேலும் கி.விஸ்வலிங்கம் என்பவரின் கடையை உடைத்து மூவாயிரத்திற்கு மேற்பட்ட உணவுப் பொருட்களும் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவங்கள் குறித்து உரிமையாளர்கள் தமிழீழ காவல்துறையிடம் முறைப்பாடுகள் செய்ததையடுத்து. உடன்ஸ்தலத்திற்கு விரைந்த காவல்துறையினர் தடயங்களைப் பார்வையிட்டதோடு விசாரணை நடத்திவருகின்றனர்.

# சுனாமியால் கடற்கரையில் புதையுண்டுள்ள மரங்கள் மீனவர்கள் தொழில் செய்வதில் இடையூறு

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையால் அள்ளுண்டு வந்த மரங்கள் கடற்கரை மணலில் புதையுண்டுள்ளதால் மீனவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர் என கடற்றொழில் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். கட்டுமரங்கள் படகுகள் மூலம் தொழில் செய்பவர்கள் அவற்றைக் கரையில் இழுக்கும்போது மண்ணில் புதையுண்டுள்ள மரங்கள் படகுகளைச் சேதப்படுத்தி வருகின்றது. இதனால் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இம்மரங்களை அகற்றுவதற்கென ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஒரு பகுதி நிதி தற்போது கிட்டியிருக்கின்ற போதும் அம்மரங்களை அகற்றுவதற்கான கனரக வாகனங்களைப் பெற்றுக் கொள்ளுவதில் உள்ள சிரமத்தினாலேயே அப்பணி தாமதமாகி வருவதாகவும் அவ்வதிகாரி தெரிவிக்கின்றார்.

# கிளி.முல்லை வைத்தியசாலைகளில் காக்கை வலிப்புக்கான மருத்துவ சேவை

**நோர்வேயிலிருந்து வந்த நரம்பியல்நிபுணர் மேற்கொள்வார்**

மாற்றீடான வலுவுள்ளோர் புனர் வாழ்வுச் சங்கத்தினால் (கரோட்) காக்கை வலிப்புக்கான நடமாடும் தொடர் மருத்துவ சேவையை நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்துள்ள நரம்பியல் நிபுணர், வைத்திய கலாநிதி சூசை ஜோசப் அவர்களால் எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் கிளி .மாவட்ட வைத்தியசாலையிலும் 15 ஆம், திகதி முல்லை மாவட்ட வைத்தியசாலையிலும் காலை 9.00 மணி தொடக்கம் அவ்வவ் மாவட்ட வைத்தியதிகாரிகளின் உதவியுடன் மேற்படி சிகிச்சை நடாத்த ஏற்பாடாகியுள்ளது. இச்சிகிச்சையின் போது ஏற்கனவே சிகிச்சை பெற்ற பயனாளிகளும். தற்போது சிகிச்சை பெற வேண்டிய புதிய பயனாளிகளும் கலந்துக்கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## -திலீபன் மருத்துவ சேவையினரால்-
# ஐயன்குளம் அ.த.க.பாடசாலையில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல்

(அலுவலக செய்தியாளர்)

ஐயன்குளம் அத.க.பாடசாலையில் கல்விபயிலும் ஐந்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல் ஒன்று நேற்றுக் காலை 11 மணியளவில் திலீபன் மருத்துவ சேவையின் மருத்துவ ஆலோசகர் வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலனால் வழங்கப்பட்டது.

இதில் சத்துணவூட்டல், தனிநபர் சுகாதாரம், பொதுச்சுகாதாரம் போன்ற விடயங்களை உள்ளடக்கி தெளிவூட்டப்பட்டது. தொடர்ந்து முதலாம், இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான உடற்பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சையும் வழங்கப்பட்டது. இதில் ஐயன்குள திலீபன் மருத்துவ சேவையை சேர்ந்த போராளி ஜெயராணி, சிறப்பு மருத்துவப் சிறப்பு மருத்துவப் போராளி ஈழவாணி ஆகியோர் பங்கேற்றனர். (கு.தீ)

# சுதந்திரபுரம் மத்தி தே.எ.பே.தெரிவும் சமகால அரசியல் கருத்தரங்கும்

(உடையார்கட்டு)

உயைார்கட்டு- சுதந்திரபுரம் மத்தி புதியதேசிய எழுச்சிப் பேரவை தெரிவிற்கும் சமகால அரசியல் கருத்துரைக்குமான ஒன்று கூடல் நேற்று முன்தினம் சுதந்திரபுரம் பொது மண்டபத்தில் கிராம அலுவலர் சுந்தரலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ்ஒன்று கூடலில் குழுக்கள் பலமாக இருக்க வேண்டிய அவசியத்தையும் சமூக செயற்பாடுகள், சமகால அரசியல் தொடர்பாகவும் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் யூட், தமிழர் புனர்வாழ்வுக்கழக முல்லை. மாவட்ட பணிப்பாளர் மூர்த்தி ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து சுதந்திரபுரம் மத்தி புதிய தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு உடையார்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை துணைச் செயலர் பொ.விதன் தலைமையில் இடம் பெற்றது.

நிர்வாகச் செயலராக ஐ.துரைச்சாமி, உபசெயலராக கோ.சந்திரபோஸ், பொருளாளராக சில்வெஸ்டார் ஆகியோரும் செ.நிர்மலா, வ.தேவராசா, வீ.இராமன், கி.இராமசாமி, ந.தர்மலிங்கம், ந.கேதீஸ்வரி. ஆ.சங்கரலிங்கம், இ.பாண்டியன் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர் களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.(19)


# இல.விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் 2005ஆம் ஆண்டு விஞ்ஞான தினப்போட்டி


(அலுவலக செய்தியாளர்)

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் அறிவியல் பரப்புக் குழு 2005ஆம் ஆண்டு விஞ்ஞான தினப் போட்டியை நேற்று கிளி/ மகாவித்தியாலயத்தில் நடத்தியது.

இதில் விஞ்ஞானப்பேச்சு, விஞ்ஞானக் கலந்துரையாடல், விஞ்ஞான வினாடி வினாப்போட்டிகள் என்பன இடம் பெற்றன. இப்போட்டிகள் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்று போட்டிகளில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் தேவராசன், சாலினி சிறிரங்கநாதன், பாலசுப்பிரமணியம் ஆகிய வைத்தியர்களின் கருத்துரைகள் இடம்பெற்றன.(தீ-கு)






இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் விஞ்ஞான தினப் போட்டி நேற்று கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போது வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன.

# உளநலம் தொடர்பான சிகிச்சையும், ஆலோசனையும்

(அலுவலகசெய்தியாளர்)

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த மருத்துவ நிபுணரினால் வரும் யூலை 11ஆம் திகதியில் இருந்து ஓகஸ்ட் 14ஆம் திகதி வரையுமான ஐந்து கிழமைகள் உளநலம் தொடர்பான சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் திங்கள், செவ்வாய்க் கிழமைகளும், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் நடுவப்பணியகத்தில் புதன்கிழமைகளிலும், முல்லைத்தீவு வைத்தியசாலையில் வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும் வடமராட்சி கிழக்கு திலீபன் மருத்துவ சேவையில் சனிக் கிழமைகளிலும், சிகிச்சைகளும், ஆலோசனைகளும் வழங்கப்ப டவுள்ளது.

மேற் குறிப்பிடப்பட்ட இடங்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரையும் இம் மருத்தவ சேவை நடைபெறும்.(தீ.கு)


# சாவு அறிவித்தல்

## குலசேகரம்பிள்ளை சிவனேஸ்வரி

**(சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ், விசுவமடு)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும்,13ஆம் கட்டை விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்டகாலஞ்சென்ற குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவி சிவனேஸ்வரி 09.07.2005 சனிக்கிழமை காரைநகரில் காலமாகிவிட்டர்.

அன்னார் கிருபானந்தன் (சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ்) சிவானந்தன் (HOLLAND) அருளானந்தன் (காரைநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலாதேவி (விசுவமடு), மனோரஞ்சிதம் (HOLLAND) தவமலர் (காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காரைநகர்,
யாழ்ப்பாணம். (5947)

தகவல்:-
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

## சிவஞானசுந்தரம்-கஜீபன்

(வயம்பா பல்கலைக்கழக 3ஆம் ஆண்டு மாணவன்
இல. 701 யோகபுரம் மத்தி)

சிவஞானசுந்தரம் பெற்றெடுத்த புத்திரனே
மல்லாவி மத்தியதனில் கல்வியதை பயின்று
பட்டப் படிப்பிற்காக வயம்பா பல்கலை சென்று
பட்டத்தைப் பெற்று நீ பிறந்த மண்ணுக்கே
பணியதை ஆற்றுவாய் என
எண்ணியிருந்தோம் ஆனால் பாதியிலே
நீ வந்த வாகனம்
உன்னைப் பறித்து விட்டது பிரிந்து நீ
போனதும் பிளந்து போனதையா எம்
இதயம் நீ காலெடுத்து நடந்த இப்
பிரதேசம் கண்ணீர் விட்டு அழுகுதையா
உன் காலடியில் எம் கண்ணீரை காணிக்கை
ஆக்குகின்றோம்.

திரு. சிவஞானசுந்தரம் அவர்களின் புத்திரன் செல்வன் கஜீபன் அவர்களின் அகால மரணத்தை அறிந்து அதிர்ச்சி உறுவதுடன், அன்னாரின் பிரிவால் தவிக்கும் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாவி சிவன் ஆலய பிரதமகுரு
சிவன் அம்மை ப/பொருள் வாணிபம்
க.வரதன்

(6008)

யாழ்ப்பாணம்



# லண்டன் நகர் மீதான தீவிரவாத தாக்குதல் எதிரொலி

# ஈராக்கிலிருந்து இத்தாலிய படையினர் திரும்பப் பெறப்படும்

## இத்தாலியப் பிரதமர் அறிவிப்பு

(லண்டன்)

**லண்டன் நகரில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தொடர் குண்டுத் தாக்குதலை அடுத்து ஈராக்கிலிருந்து இத்தாலியப் படைகள் திரும்பப் பெறப்படுமென்று இத்தாலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.**

ஸ்கொட்லாந்தில் ஜி-8 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஈராக்கிலிருந்து இத்தாலியப் படைகள் திரும்பப் பெறப்படுமென்றார். எனினும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக படை விலக்கிக் கொள்ளப்படுவது விரைவுபடுத்தப்படமாட்டாதென்றும் அவர் கூறினார்.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையில் சுமார் மூவாயிரம் இத்தாலியப்படையினர் தங்கியுள்ளனர்.

லண்டன் குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து அல் -ஹைறதா தீவிரவாத அமைப்பு அமெரிக்காவிற்கு ஆதரவாக ஈராக்கில் உள்ள படைகளை இத்தாலி திரும்பப் பெறவில்லை யென்றால் ரோம் நகரத்தின் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று தனது இணையத்தளத்தின் மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பிலிப்பைன்ஸ் சனாதிபதி இராஜினாமா செய்வாரா?

(மணிலா)

பிலிப்பைன்ஸ் சனாதிபதி குளோரியோ அரோயோ மக்களின் வற்புறுத்தலின் கீழ் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யும் பட்சத்தில் அந்த இடத்திற்கு உப சனாதிபதி நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அரோயோவினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்கள் சனாதிபதி தனது பதவி யிலிருந்து விலகி அதிகாரத்தை உப சனாதிபதியிடம் ஒப்படைக்க வேண்டு மென்று வலியுறுத்தியுள்ளார்கள்.

பிலிப்பைன்சின் சக்தி வாய்ந்த கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டில் அரோயோ பதவி விலக வேண்டுமென்ற கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பார்களானால் நிலைமை மிகவும் மோசமடையுமென்று கூறப்படுகின்றது.

## கீத்ரோ விமான நிலையத்திற்கு பாதுகாப்பு அதிகரிப்பு

உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான கீத்ரோவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஜி-8 மாநாட்டில் பங்கு பற்றச் சென்ற தலைவர்கள் ஸ்கொட்லாந்தில் இருந்ததே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை லண்டன் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் காயமடைந்த இருவரும் அமெரிக்கர்கள் என அந் நாடு தெரிவித்துள்ளது.

மேலும் இரு அமெரிக்கர்கள் காயமடைந்ததாக வந்த தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் உலக நாடுகள் பலவற்றிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## லண்டன் நகரில் தொடர் குண்டுத் தாக்குதல்

# சடலங்களை முழுமையாக அப்புறப்படுத்த முடியா நிலையில் மீட்புப் பணியாளர்கள்

(லண்டன்)

லண்டன் நகரில் ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்பில் காணாமல் போன அல்லது உயிரிழந்த தமது உறவினரைத் தேடும் பணியில் அங்குள்ள மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் ஏற்பட்டு 39 மணித்தியாலங்கள் கடந்து விட்ட நிலையில் கூட லண்டன் நகரில் அவசர மீட்புக் குழுவினருக்கு உயிரிழந்தவர்களின் சடலங்களை முழுமையாக அப்புறப்படுத்த முடியாதுள்ளதாம்.

இதேவேளை இந்த தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களின் தகவல்கள் கிடைத்து விட்டதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 4.5 கிலோகிராம் வெடி பொருட்கள் அடங்கிய குண்டுகளே இவ்வாறு வெடித்ததாகவும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்தத் தாக்குதல் பெரும்பாலும் ஓசாமா பின்லேடன் குழுவினரும் அபு முஷாப் அல் ஷக்காரி இஸ்லாமிய போராளிகளும் செய்திருக்கலாம் என்று பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

இதே வேளை மேற்படி குண்டுத் தாக்குதலை 5.6 மில்லியன் முஸ்லிம் மக்கள் கண்டித்துள்ளதுடன் இந்தச் சம்பவம் தொடர்பாக தமது அச்சத்தையும் தெரிவித்துள்ளனர்.






லண்டனில் சுரங்க புகையிரதப் பாதை, பேருந்துகளில் தாக்குதல் இடம்பெற்று ஒரு நாளின் பின்னர் டோக்கியோ கிபியா புகையிர நிலையத்தில் பத்து வருடங்களின் முன்பு இதே புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலை மீள நினைத்து பரபரப்பாக புகையிரதத்திற்குக் காத்திருக்கும் பயணிகள்.

## ஈராக்கிலிருந்து ஜப்பானிய படையினரை திரும்பப்பெற தீர்மானிக்கவில்லை

(டோக்கியோ)




ஜப்பானியப் பிரதமர் யுனிசிறோ கொய்சூமி தமது நாடு ஈராக்கிலிருந்து தமது படைகளைத் திரும்பப் பெற தீர்மானிக்கவில்லை எனக் கடந்த வியாழன் கூறியுள்ளார். ஜப்பானியப் படைகள் ஈராக்கில் நிறுத்தப்பட்டுள்ளமை பற்றித் தற்போதைய லண்டன் நகரத் தாக்குதலையடுத்து செய்தியாளர்கள் கேட்டதற்கே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். டோக்கியோவில் ஜப்பான் வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் நசிமுறா தெரிவிக்கையில், இக் குண்டுத் தாக்குதல்கள் காரணமாக படையினரை திருப்ப முடியாது எனவும் இவ் வகையான பயங்கரவாதத் தாக்குதல்கள் மன்னிக்க முடியாதவை எனவும் கூறினார். சர்வதேச கூட்டுறவுடன் நாம் பயங்கரவாதத்தினை ஒழிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## சர்ச்சைக்குரிய அணுவாயுத பிரச்சினை வடகொரியாவுக்கான கதவுகள் திறந்தேயுள்ளன

### -கொண்டலீசாரைஸ்

வடகொரியா அதன் சர்ச்சைக்குரிய அணுவாயுத உற்பத்தித் திட்டம் தொடர்பான ஆறு தரப்பு பேச்சு வார்த்தைகளுக்கு மீண்டும் திரும்புமென்ற நம்பிக்கையில் அமெரிக்கா அதன் கதவுகளைத் திறந்து வைத்திருக்கின்றதென்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசாரைஸ் தெரிவித்துள்ளார்.

ஆறு நாள் ஆசிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பீஜிங் பயணமானார். பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான திகதியை சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நிர்ணயிக்கவில்லையென்று கொண்டலீசா ரைஸ் தெரிவித்தார்.

வடகொரியாவை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர சீனா அதன் ஒத்துழைப்பை வழங்க முடியுமென்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தென்னமெரிக்காவில் வீசிய டெனிஸ் சூறாவளி கியூபா, ஹெயிட்டியில் 32 பேர் உயிரிழப்பு

டெனிஸ் என்ற சூறாவளி கரிபியன் பிரதேசமூடாக நேற்று முன்தினம் வீசியதில் கியூபாவில் பத்துப் பேரும், ஹெயிட்டியில் 22 பேரும் பலியாகியுள்ளனர்.

அதன் பின்னர் இச் சூறாவளி அமெரிக்காவின் மெக்சிக்கோ குடாப் பகுதியை நோக்கி விரைந்ததாகவும், இதனையடுத்து அப்பகுதியிலுள்ள கரையோர மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

சூறாவளி கியூபாவை கடந்து சென்ற போது சற்றுப் பலவீனமடைந்துள்ள போதும் புளோரிடா மற்றும் மெக்சிக்கோவின் தென் கிழக்குப் பகுதியை சென்றடையும் போது மீண்டும் வலுவடையும் என மியாமியிலுள்ள தேசிய சூறாவளி நிலையம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 18 நாள் குழந்தையும் அடங்குமென்று அரசாங்கத் தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இச் சூறாவளி மெக்சிக்கோ வளை குடாவினூடாகச் சென்று அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தின் தென் பகுதியை இந்த வார இறுதியில் தாக்கக்கூடுமென்றும் சர்வதேச வானிலை அவதானிகள் கூறியுள்ளனர். இதன் காரணமாக புளோரிடாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை வெளியேறுமாறும் கோரப்பட்டுள்ளது.

கடும் சூறாவளி காரணமாக ஜமேக்காவில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



லண்டனில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்தாவில் பிரித்தானியத் தூதரகத்தின் முன்னால் இந்தோனேஷியப் பொலிசார் பாதுகாப்புக் கடமை யில் ஈடுபட்டுள்ளார்.

## ஆபிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் மேம்பாட்டிற்கு 50 மில்லியன் நிதி; ஜி-8 மாநாட்டில் தீர்மானம்

(லண்டன்)

ஆபிரிக்கா உள்ளிட்ட வளரும் நாடுகளின் மேம்பாட்டிற்காக 50 மில்லியன் டொலரை வழங்குவதாக ஜி-8 மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாநாடு ஸ்கொட்லாந்தில் கடந்த ஏழாம் திகதி ஆரம்பமாகிய ஜி-8 மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளின் வறுமையை ஒழிக்க நிதியுதவி வழங்குவது, பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் சீர்கேடுகளை தடுப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து இம் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இம் மாநாட்டின் நிறைவு நாளில் பங்கு பற்றிய அனைவரும் லண்டனில் இடம்பெற்ற சம்பவத்தை வன்மையாகக் கண்டித்தனர்.

உலகம் முழுவதிலும் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட உறுதி பூண்டுள்ளனர். மாநாட்டின் இறுதியில் பேசிய பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் வளரும் நாடுகளின் மேம்பாட்டிற்காக 50 மில்லியன் டொலர் உதவியை அறிவித்துள்ளார். இந்த உதவித் தொகையை உயர்த்துவதற்கான கால அட்டவணை எதனையும் பிளேயர் குறிப்பிடவில்லை. பலஸ்தீனத்தினது மேம்பாட்டிற்கு நிதியளிக்கவும் ஜி-8 மாநாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

# திருமலையில் அமைதி நிலவவேண்டுமானால் சனாதிபதி புத்தர்சிலையை அகற்ற உடன் செயற்படவேண்டும்

## -தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை

(திருகோணமலை)

***திருகோணமலையில் பூரண அமைதி நிலவி, சமாதானம் நீடித்து நிலைக்க வேண்டுமாயின் சனாதிபதி நேரடியாகத் தலையிட்டு சட்டவிரோத மாக நிர்மாணிக்கப்பட்ட புத்தர்சிலையைஉடனே அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.***

புத்தர்சிலை தொடர்பாக பேரவை வெளியிட்ட பிந்திய அறிக்கை ஒன்றில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருமலையில் இயல்பு நிலையைக் குழப்ப வேண்டும் என்ற ஒரே நோக்கில் நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றக் கோரி ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம், அரசதரப்பு மற்றும் சனாதிபதியினதும் வேண்டுகோளுக்கு இணங்கவே, நீதி வழங்கப்படும் என்ற உயர்ந்த எதிர்பார்ப்புடன் ஒத்திவைக்கப்பட்டது. எமது மக்களின் உணர்வுகளுக்கு மாறாகக்கூட நாம் சில தீர்மானங்களை மேற் கொள்ள நேரிட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஆனால், இன்று நடப்பது என்ன? புதிதாகவும் சில புத்தர் சிலைகள் வீதிகளின் பக்கத்தில் வீதி அதிகாரசபையின் அனுமதி பெறாமல், தமிழ் மக்களுக்குச் சொந்தமான தம்பலகமம் பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமான ஜெயபுர என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளன. இந்தத் தீயசக்திகளின் நோக்கம் என்ன? சனாதிபதியால் அனுப்பப்பட்ட அமைச்சர் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்படி சனாதிபதியால் நேரடியாக உறுதி கூறப்பட்டது" என்றும் பேரவை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"தமிழ்மக்கள் தங்கள் எதிர்ப்பை முற்றிலும் அகிம்சை வழியில் எவ்வித வன்முறைகளுக்கும் இடம்கொடாது நிதானமாக எத்தனை நாட்கள் சென்றாலும் முன்னெடுத்துச் செல்வது திண்ணம். தமக்குள்ள உயர் அதிகாரத்தைப் பாவித்து புத்தர்சிலையை அகற்றி சமாதானமும், இன ஒற்றுமையும், இயல்பு நிலையும் நீடித்து நிலைக்கச் செய்வது சனாதிபதியின் தீர்மானத்திலும், கரங்களிலுமேயே தங்கியுள்ளது" என்றும் பேரவை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"புத்தர்சிலை தொடர்பாக இனிப் பேசுவதற்கு இல்லை. பேச்சுவார்த்தைகள் ...வும் எமது அகிம்சை வழிப் போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே கருதுகின்றோம்"என்றும் பேரவை அறிக்கையில் கூறியுள்ளது. (25)

## நள்ளிரவில் வீடு புகுந்து நகைகள் கொள்ளை!

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாவில் வீடொன்றில் 14 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டன. இந்தச் சம்பவம் கடந்த மூன்றாம் திகதி நள்ளிரவு இடம்பெற்றது.

பள்ளிக்குடாவைச் சேர்ந்த சோமசேகரம் கணேசபாலன் என்பவரின் வீட்டிலேயே நகைகள் கொள்ளையிடப்பட்டன.

மேலும் இக் கொள்ளையர்கள் மயக்க மருந்தைப் பாவித்தே நகைகளை கொள்ளையடித்துச் சென்றிருப்பதாகவும் இதனால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் கணேசபாலன் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பவதினம் இரவு மேலும் இருவரது வீடுகளில் கொள்ளையர்கள் கொள்ளையடிக்க முயன்றவேளை அவ் வீட்டார்கள் விழித்துக் கொண்டதால் கைகூடாது தப்பிச் சென்றனர்.இச்சம்பவங்களால் இப்பகுதி மக்களிடையே பதற்றம் நிலவுகின்றது.(34)

## புனரமைப்புக்கூட்டம்

பூநகரி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர் குழு புனரமைப்பதற்கான பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் காசிநாதர் கார்த்திகேசு தலைமையில் எதிர்வரும் 19ஆம் திகதி காலை பத்து மணியளவில் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு தவறாது அனைவரும் சமூகமளிக்குமாறு தலைவர் கேட்டுள்ளார். இக்கூட்டத்தில் மகளிர் குழு மத்திய குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர் (34)

# தரையிலிருந்து கற்கும் மாணவர்களின் அவலநிலை போக்க உதவி புரிக!

(அலுவலக செய்தியாளர்)

நாச்சிக்குடா அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விகற்றுவரும் தரம் ஒன்று வகுப்பு மாணவர்களுக்கான தளபாட வசதியின்மையால் தரையில் இருந்து கல்வி கற்று வருகிறார்கள் என பாடசாலைப் பிரதி அதிபர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எங்கள் பாடசாலையில் பெரும் நெருக்கடிகள் இருந்து வந்தது. தளபாடம், கட்டிடம், ஆசிரியர் பற்றாக்குறை என அதிகளவில் காணப்பட்டு வந்தன. பின்னர் அவை ஓரளவு நீக்கப்பட்டு விட்டது. எனினும் தரம் ஒன்றில் கல்வி கற்கும் 63 பிள்ளைகளுக்கான தளபாடம் இல்லாதநிலை தொடர்ந்து வருகிறது. இதனால் அவர்கள் தரையில் அமர்ந்தே கல்விகற்று வருகின்றனர் எனவும் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இந்தப் பாடசாலையில் 535இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அவர்களின் கல்விநிலை தற்போது ஓரளவு முன்னேற்றம் அடைந்து வருகிறது. இதைவிட எங்கள் பாடசாலையில் 75 வரையான முஸ்லிம் மாணவர்களும் கல்விகற்று வருகின்றனர். அவர்களின் கல்விநிலையும் குறிப்பிடக் கூடியதாக இருக்கிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

## -பரந்தன் -முல்லை பிரதான வீதியில்-

# புனரமைக்கப்பட்ட பாலத்தின் ஊடான போக்குவரத்திற்கு அனுமதியளிக்க தாமதம் ஏன்?



(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் -முல்லைசாலையில் முரசுமோட்டை முருகானந்தா பாடசாலைக்கு அண்மையில் அமைக்கப்பட்டு பாலவேலைகள் நிறைவடைந்தும் கிரவல் பரவுவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி பாலப்புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்துள்ளது. எனினும் பாலத்தின் இரு கரைகளிலும் கிரவல் பரவப்படாத நிலைகாணப்படுகின்றது. கிரவல் கொட்டப்பட்டிருந்தபோதும் அவை பரவப்படாது அப்படியே காணப்படுகிறது. இதனால் வேலைகள் நிறைவடையாது தொடர்ந்து செல்கிறது.

இதன் காரணமாக பாலத்தை சுற்றிச் செல்கின்ற தற்காலிக வீதியினூடாகவே தொடர்ந்தும் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பாலத்துக்கான கிரவலை விரைவாகப்பரவி மக்களின் சிரமமற்ற போக்குவரத்துக்கு வழிசெய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரப்படுகிறது. (லோ)

# இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்த அவுஸ்திரேலிய அரசாங்கம் நிதியுதவி

## - அரச அதிபர்களூடாக நடவடிக்கை

மன்னார், வவுனியாவில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்ற அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதி உதவி தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் காரணமாக இடம்பெயர்ந்து மன்னார், வவுனியா பகுதிகளில் வாழ்பவர்களை மீளக்குடியேற்றும் திட்டத்திற்கு அவுஸ்திரேலியா 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மன்னார்,வவுனியா பகுதிகளில் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்பவர்களை மீளக்குடியேற்றும் திட்டத்திற்கு அவுஸ்திரேலியா 3.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும், அமைச்சும் இணைந்து இந்தத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. குறிப்பிட்ட பிரதேசங்களில் அரசாங்க அதிபர்கள் இவற்றை அமுல் படுத்துவார்கள்.

தேசிய மட்டத்தில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமூகத்தினரையும், ஏனைய அமைப்புக்களையும் உள்ளடக்கிய திட்ட நெறிப்படுத்தல் குழுவொன்று ஏற்படுத்தப்படும். இது சம்பந்தமாக சகல தரப்பினர் மத்தியில் ஒருங்கிணைப்பு மற்றும் கொள்கை நெறிப்படுத்தலுக்குப் பொறுப்பாகப் விளங்கும் பிரதேச அளவில் சிவில் அமைப்புக்கள் உள்ளூராட்சி அமைப்புக்களை, உள்ளடக்கிய ஒருங்கிணைப்புக்குழுவொன்று திட்ட அமுலாக்கலை மேற்பார்வை செய்யும்.அரசாங்க அதிபர் இக்குழுவிற்குத்தலைவராக விளங்குவார். அவுஸ்திரேலிய அரசாங்கமும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் இது தொடர்பான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.



கிளிநொச்சி டிப்போ வீதியில் சேவியர் கடைச்சந்திக்கருகாமையில் கடந்த வியாழக்கிழமை எல்ரக வாகனமும். இருசக்கர உழவு இயந்திரமும் விபத்துக்குள்ளான நிலையிலுள்ளதனைப் படத்தில் காணலாம்

படம் (சோதி)

## மீன்பிடிப் படகுகளை புனரமைக்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

வாகரைப்பிரதேச செயலர் பிரிவுக்குள் அடங்கும் மீனவர்களின் உடைந்துபோன மீன்பிடிப்படகுகளை திருத்தி வழங்கும் வோர்ட் ஜெட் திறப்புவிழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நோர்வேயின் ஏ. ஜே. நிறுவனப்பணிப்பாளர் உட்பட்டோர் பங்கேற்றனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடி இயந்திரங்களும், மீன்பிடிவலைகளும் இந்த வோர்ட் ஜெட் மூலம் வழங்கப்படவுள்ளன.

# 429 தற்காலிக வீடுகள் பாதிப்புற்றோருக்கு அமைப்பு

(திருமலை)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கம் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்று, சேருவாவில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு 429 தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளது. இதனைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வாரம் நடைபெற்றது. சீனன் வெளியில் 63 வீடுகளும் இலங்கைத்துறை முகத்துவாரத்தில் 248 வீடுகளும் புண்ணையடியில் 118 வீடுகளும் பயனாளிகளுக்கு கையளிக்கப்படுகின்றன.

நோர்வே அகதிகள் பேரவையின் நிதியுதவியுடன் இவை அமைக்கப்பட்டுள்ளன. கடல் அனர்த்தம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் இடம்பெயர்ந்தவர்களுக்கான இந்த தற்காலிக வீடுகள் வழங்கி வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# சுயதொழிலை ஊக்குவிக்க 46 பேருக்கு கடன் வழங்கல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியீட்டத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் நிகொட் திட்டத்தின் கீழான கடன் வழங்கல் நிகழ்வு இரணைமாதா நகர் கிராம சொக்கலிங்கம் பூங்கா வளாகத்தில் கடந்த திங்களன்று சமூகப்பொருளாதார அபிவிருத்திச்சங்கத் தலைவர் சூ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றலினைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் செயற்திட்ட இணைப்பாளர் யோ. கோபி ஏற்றி வைத்தார். மாவீரர்களிற்கு மலர் மாலை அணிவிக்கப்பெற்றதுடன் அனைவரினாலும் மலர் வணக்கம் செய்யப்பெற்றது.

தொடர்ந்து கருத்துரையினை நிகொட் திட்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவச்செல்வன், கோபிகிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் செ.சூசைநாதன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து பயனாளிகளுக்கான கடன் வழங்கல் நிகழ்வு ஆரம்பமானது.

இக்கடன் திட்டத்தின் மூலம் 46 பயனாளிகளுக்கு 9,72,000 ரூபா மீன்பிடி, சிறுவியாபாரம், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகிய திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

## தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வடமராட்சி கிழக்கு மாதர்சங்கங்களின் ஒன்றியத்தின் ஊடாக இரண்டாம் கட்டமாக ஏழு தையல் இயந்திரங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவனம் வழங்கியுள்ளது.

மேற்படி நிகழ்வானது வடமராட்சி கிழக்கு புனரமைப்பு நிறுவன அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை மாதர் சங்கங்களின் ஒன்றியத்தலைவி வசந்தி தலைமையில் இடம்பெற்றது. (தீ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்டும் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்து அவலம்

**புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டபோதும் இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்வதற்கு உயர்பாதுகாப்பு வலயத்தைக் காரணம் காட்டி படைத்தரப்பினர் அனுமதி வழங்க மறுக்கின்றனர். இவ்வாறு யாழ். மாவட்டத்தின் பொதுஅமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.**

மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட அளவெட்டி பிரதேசம் பன்னாலை பகுதியில் முழுமையான மீள்குடியமர்விற்கு படைத்தரப்பு தற்போதும் தடையாகவுள்ளது.

குறிப்பாக பன்னாலைப் பகுதியில் இடம்பெயர்ந்து வெளி மாவட்டங்களில் வசித்து சொந்த ஊர் திரும்பியுள்ள மக்களை குடியமர படைத்தரப்பு அனுமதி மறுத்துள்ளது. இதனால் மீளக் குடியமர முற்பட்ட குடும்பங்கள் தம் முயற்சியினைக் கைவிட்டுமுள்ளன.

இதேவேளை உயர்பாதுகாப்பு வலயத்தின் முன்னரங்க நிலைக்கு வெளியே உள்ள 600 மீற்றர் சூனியப் பகுதியினுள் புதிய வீடுகளை கட்டவோ அல்லது சேதமடைந்த நிலையிலுள்ள வீடுகளைத் திருத்தம் செய்யவோ படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகிறது.

எனினும் சில பகுதிகளில் படையினரின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள், படையினரின் எச்சரிக்கையையடுத்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளபோதும் தமது வீடுகளைத் திருத்த அனுமதிக்கப்படாமையால் அவலவாழ்வு வாழவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். திருத்தப்படாத வீடுகளிலேயே பல மாதங்களாக இக்குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்துள்ளன. (27)

# தென்மராட்சியில் 200 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் இன்னும் 200 வீதிகள் புனரமைக்க வேண்டிய நிலையில் இருப்பதாக சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வீதிகளைப் புனரமைப்பதற்கு தேவையான நிதியுதவிகளை அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் தாம் எதிர்பார்த்து இருப்பதாகவும், கடந்த கால போரினாலும், மழை போன்ற இயற்கை அழிவுகளாலும் நீண்ட பல வருடங்களாக புனரமைக்கப் படாமல் இருக்கின்ற இவ்வீதிகள் அவசர கதியாக புனரமைக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

நிதி ஆதாரங்கள் எமக்கு கிடைக்காமையால் இத்திட்டங்களை முன்னெடுப்பதில் ஒரு விதமுடக்க நிலை தொடர்வதாகவும் இக்குறைபாடுகளை நீக்க தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கிடைக்கும் நிதியைப்பகிர்ந்து மக்களின் தேவைகள் குறைந்த அளவில் செயற்படுத்தி வருவதாகவும்அவர் தெரிவித்தார். (28)

# தென்மராட்சியில் கற்பித்தல் செயற்பாடுகள் ஆசிரியர் இடம்பெயர்வால் பாதிப்பு

(தென்மராட்சி)

ஆசிரியர்களின் இடம்பெயர்வுகளால் தென்மராட்சிப் பாடசாலைகளின் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும்பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

போரினாலும், கடும் பொருளாதார நெருக்கடிகளாலும் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், அவர்களின் கல்வித்தேவைகளை இன்றுவரை சரியாக பூர்த்திசெய்ய முடியாத அவல நிலை தொடர்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் முதல்காரணமாக விளங்குவது இப்பிரதேசத்தை சேர்ந்த 80 சதவீத ஆசிரியர்களும் அதிபர்களும், இடப்பெயர்வின் காரணமாக யாழ்ப்பாணத்தின் இதரபகுதிகளுக்கு தங்களின் இல்லிடங்களை மாற்றி விட்டதால் இவர்கள் அங்கிருந்து வருவதிலும் பாடசாலை கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் சிக்கல்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மாலை, காலை நேர வகுப்புக்களை பாடசாலைகளில் நடத்த முடியாத நிலை தொடர்வதாகவும், இதுவும் மாணவர்களின் கல்வி வீழ்ச்சிக்கு வழிகோலியுள்ளதாகவும் தெரிவித்தார். தென்மராட்சி அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசஅதிகாரிகள் முன்நிலையில் இத்தகவலை அவர் தெரிவித்தார். (28)

# வடமராட்சி மீனவருக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ். வடமராட்சி பருத்தித்துறை மீனவர்களுக்கு எப்.ஏ.ஓ நிறுவனம் சுமார் 23 இலட்சம் ரூபா பெறுமதி யான நிவாரணப் பொருட்களை வழங்கவுள்ளது.

ஒவ்வொன்றும் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியுள்ள தொழில் மற்றும் வீட்டுப் பாவனைப்பொருட்களடங்கிய பொதிகள் இந் நிறுவனத்தால் வழங்கப்படவுள்ளன.

இன்றும், நாளையும் வழங்கப்படும் இப்பொருட் பொதிகள் வழங்கும் நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

இதில் 230 மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்படவுள்ளது. (33)

# புதிய இணைப்புக்களை வழங்குவதில் மி.சபைக்கு பாரிய சிக்கல்களாம்

(தென்மராட்சி)

புதிய இணைப்புக்களை வழங்குவதிலும், மேலதிக வேலைத்திட்டங்களை செய்வதிலும் பாரிய சிக்கல்களை நாம் எதிர்நோக்கியுள்ளோமென சாவகச்சேரி மின்அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு தான் தயாராக இருப்பினும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மின்கம்பங்கள் மற்றும் மின் உபகரணங்கள் தமக்கு கிடைப்பதால் மேலதிக வேலைத் திட்டங்களை செய்வதில் பாரிய சிக்கல்களை தாம் எதிர்நோக்கியுள்ளதாகவும், இதனால் புதிய இணைப்புக்களை வழங்குவதிலும், தற்காலிமாக வழங்கப்பட்ட மின் இணைப்புக்களுக்கு மீற்றர்களை பொருத்த முடியாத சூழ்நிலை தொடர்வதாகவும் அதற்கான மின்மாற்றிகளை வழங்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (28)

# பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர் பற்றாக்குறையால் கட்டட வேலைகள் தாமதம்

## – யாழ். கட்டட திணைக்கள பொறியியலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ். கட்டடத் திணைக்கள பொறியியலாளர் தெரிவிக்கிறார்.

யாழ்.குடாநாட்டில் பல பெரிய கட்டடங்களை கட்டும் திட்டம், அரசசார்பற்ற நிறுவனங்களிடம் தயார் நிலையில் இருப்பினும் இக்கட்டடங்களை நிர்மாணிக்கத் தேவையான பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பெரும் பற்றாக்குறையாக இருக்கின்றனர். இதனால் புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதில் தாமதம் நிலவி வருவதுடன், உபவேலைகளான தச்சுவேலை, மேசன்வேலை கூலியாட்களுக்கும் பெரும் பற்றாக்குறை உள்ளதால் புதிய கட்டடங்கள் கட்டி முடிப்பதில் தாமதநிலை நீடித்துள்ளதாக பொறியியலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (28)

# பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

உலகவங்கியின் வடக்கு கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவில் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர்க்கான விசேட செயற்றிட்டத்தின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டை யாழ். தென்மராட்சியிலுள்ள வரணிப் பகுதியைச் சேர்ந்த நான்கு பேரும் மட்டுவிலைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் ஐந்து பேர் இம்முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

மேற்படி வீடமைப்புத்திட்டத்தில் பயனாளிகள் தெரிவிற்கு தகுதியானவர்களாக தாம் உள்ளபோதும் தம்மைத் தவிர்த்து இத்திட்டத்துக்கு தகுதியற்றவர்களை அதிகாரிகள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதால் உண்மையிலேயே பாதிக்கப்பட்ட தாம் பயன்பெற முடியாது போயுள்ளமையைச் சுட்டிக்காட்டியே மேற்படி முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேற்படி வரணி மற்றும் மட்டுவில் ஆகிய இடங்களில் பயனாளிகள் தெரிவில் ஈடுபட்ட தென்மராட்சி பிரதேச செயலக அதிகாரிகளிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயற்றிட்ட அதிகாரிகள் விளக்கம் கோரியுள்ளனர். (33)

# யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியை தரமுயர்த்த கொரியா நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தொழில் நுட்பக் கல்லூரியின் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக கொரியாவைச்சேர்ந்த பொறியியலாளர் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரும் இக்கொரிய பொறியியலாளர் குழு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளதுடன் கொரியநாட்டு தொழில்நுட்ப கற்கை நெறிகளை யாழ். தொழில்நுட்பக்கல்லூரி ஊடாக யாழ். குடாநாட்டுக்கு அறிமுகம் செய்வதிலுள்ள சாத்தியக் கூறுகள் பற்றியும், கொரிய நாட்டு நிதியுதவியுடன் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள் பற்றியும் இவர்கள் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவுள்ளது. (33).

# போதிய தளபாடங்கள் இன்மையால் மாணவரின் கற்றல் செயற்பாடு பாதிப்பு

## –சாவகச்சேரி இந்துக்கல்லூரி அபி. சங்கம் தெரிவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள தேசிய பாடசாலையென அங்கீகாரம் பெற்ற இந்துக்கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதிகளோ, தளபாட வசதிகளோ இல்லை என பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவை போதிய அளவில் இல்லாமையால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நெருக்கடி நிலையினைச் சந்திப்பதாகவும், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இடவசதிகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் பாடசாலை சமூகம் அவசர வேண்டு கோளை விடுத்துள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகளவு மாணவர்களைக் கொண்டபாடசாலை இந்துக்கல்லூரி என்பது குறிப்பிடத்தக்கது. (28)

# உதவிப்பொருட்களை விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கென வழங்கப்படும் கடற்றொழில் உபகரணங்களை விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் என்பன விடுத்துள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற் றொழிலாளர்களது தொழில்துறை மேம்பாட்டுக்கென பல்வேறு நிறுவனங்களும் கடற்றொழில் உபகரணங்களை வழங்கிவருகின்றன.

எனினும் இவ் உபகரண உதவிகளைப் பெறும் சில கடற்றொழிலாளர்கள் அவற்றை விற்பனை செய்து வருகின்றனர். இது கண்டுபிடிக்கப்படும்பட்சத்தில் அவர்களுக்கென வழங்கப்பட்ட உதவிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (33)

# சுயதொழில் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் வாழ்ந்து விட்டு மீளக்குடியமரத் திரும்பியுள்ள வலிகாமம் தெற்குபகுதி மக்களுக்கு புலம் பெயர்ந்தவர்களுக்கான சர்வதேச அமைப்பு (ION) சுயதொழில் ஊக்குவிப்பு உதவிகளை வழங்கியுள்ளது.

அந்த வகையில் வலிகாமம் தெற்கு பிரதேசத்தைச்சேர்ந்த சுமார் நூறு குடும்பங்களைச் சேர்ந்த குடும்பத்தலைவர்களுக்கு தொழில் ஊக்குவிப்பு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் தையல் இயந்திரங்கள், கடற்றொழில் உபகரணங்கள் என்பன அடங்கும். (33)

# வடபிராந்திய போ. ச. யின் 9பேருந்துகள் படையினரின் பாவனையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பொது மக்களின் பாவனைக்குரிய வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஒன்பது பயணிகள் பேருந்துகள் தற்போது படையினரின் பாவனையில் இருந்து வருகின்றன. யாழ். குடாநாட்டில் பேருந்துகள் பற்றாக்குறையால் பயணிகளின் போக்குவரத்துக்களை மேற்கொள்வதில் பாரியதொரு நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள மக்கள் இப்பேருந்துகளை மீண்டும் பொதுமக்களின் சேவைகளில் ஈடுபடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

# அரசியல் அபிலாசைகளால் மதிப்பிழந்து செல்லும் துறவிகள்

இலங்கையின் வரலாறு என சிங்கள மக்கள் நம்பிக்கொண்டிருப்பது மகாவம்சம் கூறுவதை. அவர்களை அவ்வாறு நம்பவைப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பவர்கள் பௌத்த துறவிகள். மகாவம்சத்தில் புத்தர் இலங்கைக்கு முதல்தடவையாக வருகை தந்ததற்கு காரணமொன்று கூறப்பட்டுள்ளது.

வைகாசி மாதத்தின் பௌர்ணமி நாளில் புத்தர் மகத தேசத்திலுள்ள அரச மரத்தினடியில் அமர்ந்திருந்தார். அவ்வேளையில்



பௌத்ததேசம் பெரும் உத்வேகத்துடன் பெருவளர்ச்சியடையக்கூடிய இடம் இலங்கை என்று அவருக்குத் தோன்றியது. அதற்குத் தடை அங்கு வசித்து வருகின்ற இயக்கர்கள் அவர்களை அகற்றி அத் தீவைப் புனிதப்படுத்தவேண்டும் என அவர் நினைத்தார்----

இவ்வாறு போகின்றது மகாவம்சம் கூறும் கதை. வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து பரிநிர்வாணம் அடைந்த புத்தர் தான்கூறிய போதனைகள் வாழ இவ்வாறானதொரு வழிமுறையைச் சிந்தித்திருப்பாரா? இல்லையா? என்பது ஒருபுறம். ஆனால் அவ்வாறுதான் இலங்கையிலுள்ள



சிங்களபௌத்த துறவிகள் புத்தர் நினைத்ததாக வலியுறுத்தி வருகின்றனர்.

புத்தரின் போதனைகளை பௌத்தத்தை பின்பற்றும் மக்களிடம் போதிப்பதை விடுத்து போதனைகளைக் கடைப்பிடிப்பதை தாமே கைவிட்டுவிட்டு, ஏன் போதனைகளையே மறந்துவிட்டு புத்தர் முதல் தடவை இலங்கைக்கு ஏன் வந்தார் என்று மகாவம்சம் கூறுகிறதோ அதனை நடைமுறைப்படுத்தவே அவர்கள் முயல்கின்றனர்.

இலங்கையின் வரலாறு என்று அவர்கள் கூறும் 2500 வருடகாலமும் இதற்கான முயற்சிகள் அதாவது இலங்கையில் வசித்த ஆதிக்குடிகளை இலங்கையிலிருந்து அகற்றும் முயற்சி தொடர்வதாகவே வரலாறு கூறுகிறது. அந்த வரலாற்றின் தொடர்ச்சியாகவே இன்றைய சம்பவங்களும், செயற்பாடுகளும் பௌத்த துறவிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையை விட்டு பிரித்தானியர்கள் நீங்கிச் சென்றவேளையில் இலங்கையின் தேசியக்கொடி எவ்வாறு அமைதல் வேண்டும் என எழுந்த சர்ச்சை, அதில் தமக்கொரு அடையாளம் கோரிய சிறுபான்மையின மக்களுக்கு கிடைத்தது, நிறக் கோடுகள் மட்டுமே. ஆனால் பௌத்தக் கொடியே ஏற்றப்பட வேண்டும் என பௌத்த மகாசங்கம் குரல் எழுப்பி அது மறுக்கப்பட்டபோது சுதந்திர தின நிகழ்வையே பகிஷ்கரித்தது.

1956 தேர்தலின்போது ஆட்சிபீடமேறத் துடித்துக் கொண்டிருந்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தகப்பனாரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கவிற்கு ஆதரவு வழங்க எக்சத் பிக்கு பெரமுன பத்துக் கட்டளைகளைப் பிறப்பித்தது. இதில் முதன்மையானது சிங்களம் மட்டும் சட்டம், பண்டா-செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தமை, இனவன்முறைகள் என இந்தப் பிக்குகளின் போராட்டம் தொடர்கின்றது.

இந்தப் போராட்டங்கள் எல்லாம் அரசியலில் நேரடியாக இடம்பெறாது ஆட்சியாளருக்கு அழுத்தம் கொடுத்து பௌத்த பிக்குகள் சாதித்துக் கொண்டவை. இதனைத்தான் பிக்குகள் அன்றுதொட்டு மகாசங்கமே ஆட்சியை வழிநடத்துவதாகப் பெருமையுடன் கூறிவந்தார்கள்.

இன்று நிலைமை மாறி வருகிறது. இன்று சிறிது சிறிதாக நேரடியாக அரசியலுக்குள் புகுந்து பாராளுமன்றம்வரை வந்துவிட்ட புத்த பிக்குகள் அடுத்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகி முடிசூடிக்கொள்ளும் கனவுடன் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இன்று அவர்கள் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ள ஜாதிகஹெல உறுமயவின் மூலக்கட்சி சிஹல உறுமய. இது யுத்தகாலத்தில் புலிகளின் பகுதிகளுக்கு அனுப்பப்படும் அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களை முற்றாகத் தடைசெய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்தி வந்தது.

எனவே, உலகமே அனுதாபத்துடன் பார்க்கும் ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கென அமைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்துக்கு காட்டி வரும் எதிர்ப்பானது தமிழீழ மக்களுக்கு ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. உண்மையில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இந்த அழிவு குறித்து மகிழ்ச்சி கொண்டாடியவர்கள் அவர்கள்.




ஆனால் இந்தப் பொதுக் கட்டமைப்புக்கு எதிராக இந்தப் பிக்குகள் நடத்திய போராட்டங்கள் இவர்களின் சுயரூபத்தை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. அதாவது இந்த ஒப்பந்தத்தை சனாதிபதி சந்திரிகா விரும்பி மேற்கொண்டது போலக்காட்டி சிங்கள பௌத்தத்தைக்காக்க அவதாரம் எடுத்த இரட்சகர்கள் தாமே எனக் காட்டிக் கொள்ள இவர்கள் செய்த அட்டகாசங்கள் சிங்கள பௌத்த மக்கள் மத்தியிலேயே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. சாதாரணமான தன்னிலைமறந்து போதையிலுள்ள குடிகாரர்கள் கூட உச்சரிக்கக்கூசும் வார்த்தைகளால் கோஷங்களை இவர்கள் இட்டிருக்கின்றனர்.

கோட்டை ரயில் நிலையப்பகுதியில் இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் விரக்தியடைந்து சலிப்படைந்து போயுள்ள



சிங்களவர்த்தகர்களும், பொதுமக்களும் தனியே அப்பகுதியால் செல்லும் பிக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாக சிங்கள ஊடகங்கள் கூறுகின்றன. அவ்வளவிற்கு பிக்குகளைப் பதவிவெறி பிடித்து ஆட்டுகிறது என்றுதான் கூறவேண்டும்.

இப்போழுது பிக்குகளில் ஒருதரப்பினர் நேரடியாக அரசியலில் இறங்கிவிட்டனர். இவர்களுக்கு இலஞ்சமும், பதவியும் கொடுத்து விலைக்கு வாங்கும் முயற்சிகளில் அரசியல்கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அது இயலாத காரியமுமல்ல ஏனெனில் சபாநாயகர் தெரிவின்போதே தமக்கு ஆதரவான இரு பிக்குகளை வாக்களிக்க வைக்க ஆளும் கட்சியால் முடிந்திருக்கின்றது. அதேவேளை அதேஆளும் கட்சியினர் சபாநாயகர் தெரிவின்போது தோல்வியடைந்த போது பௌத்த பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

முன்னர் இவர்களின் போராட்டங்களுக்கு அஞ்சிய ஆட்சியாளர்கள் பிக்குகள் தமக்குப் போட்டியாளர்களாகியதும் இன்று அவர்கள் மீது கண்ணீர்ப்புகை வீசித்தாக்கவும், இவர்களைக் கேலி செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்ததேரரின் உண்ணாவிரதத்தைக்கேலிசெய்த சிரேஷ்ட அமைச்சர் டி.எம் ஜெயரட்ண திலீபனைத் தவிர கொள்கைக்காக உயிர் துறந்தவர் எவருமில்லை. சாதுக்கள் அவ்வாறெல்லாம் உயிர்துறந்து தியாகிகளாகக் கூடியவர்கள் அல்ல எனவும் கூறினார். அவர் கூறியது போலவே நடந்தது.' சிங்கள தற்கொலைப் படையொன்றை அமைக்க இருவருடங்களுக்கு முன் இவர்கள் அறிவித்திருந்தனர் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது. பொதுக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் பெற சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அஸ்கிரிய பீடாதிபதிக்கு சொகுசு வாகனம் அன்பளிப்புச் செய்ததாக இனவாதப் பத்திரிகையான "திவயின" செய்தி வெளியிடுகிறது.

இராணுவத்துக்கு மட்டுமல்ல பௌத்த பிக்குகளாகவும் சங்கத்தில் இணைய சிங்கள இளைஞர்கள் தயாரில்லை இதனையே சுமார் ஐந்து வருடங்களுக்கு முன் பத்தாயிரம் பேரை இராணுவத்திலும், பத்தாயிரம் பேரை பிக்குகளாகவும் சேர்க்க தற்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எடுத்த முயற்சியின் தோல்வி காட்டியது.

இப்பொழுதுதாம் நடத்துகின்ற போராட்டங்கள் தமக்கு ஆட்சியதிகாரத்தை ஈட்டித் தரும் என பிக்குகள் எண்ணலாம். ஆனால் அதனை ஆட்சியாளர்கள் மட்டுமல்ல இவர்களை முன்னேவிட்டுள்ள சிஹலஉறுமய தலைவர்களான சம்பிக்க ரணவக்க போன்றோரும் அனுமதிக்கப்போவதில்லை.

இவர்கள் தாம் நடத்தும் போராட்டம் பௌத்த சிங்களத்தையும், இந்த நாட்டையும் காப்பாற்றுவதற்காகவே என்று கூறினாலும் இந்த நாட்டை பௌத்த சிங்களவர்கள் மட்டும் கொண்ட நாடாக்கும் மகாவம்சக் கருத்தின் அடிப்படையிலானதே இவர்களின் கொள்கை.


ஆனால் இன்றுள்ள நிலையில் அது நனவாகுமாயின் அப்போதும் புத்தர் விரும்பியதுபோல் பௌத்தக்கோட்பாடுகள் எதுவும் இலங்கையில் இருக்குமா? அல்லது பின்பற்றப்படுமா? என்பது கேள்விக்குரியதே ஏனெனில் அவற்றை மகாசங்கமே அழித்துவிடும்.

**வேலவன்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# உணவு கையாளும் நிலையங்களில் சுகாதாரத்தைப் பேண நடவடிக்கை

## -த.ஈ.சே.நடுவப்பணியகத்தில் கலந்துரையாடல்



(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உணவகங்கள், தேநீர்ச்சாலைகள் மற்றும் குளிர்பான நிலையங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சியிலுள்ள தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப்பணியகத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலானது காலை 9.30 மணியளவில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்ரமன் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் போது உணவகம், தேநீர்ச்சாலை மற்றும் குளிர்பான நிலையம் ஒன்றிற்கான அடிப்படை ஒழுங்குகள் தொடர்பாக பூரணமாக தெளிவுபடுத்தி கூறப்பட்டதுடன், அதுதொடர்பான சுற்றறிக்கை ஒன்று உணவு நிலைய உரிமையாளர்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் 20 இற்கும் மேற்பட்ட கட்டாயமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனை மீறும் பட்சத்தில் அல்லது இந்த நடைமுறைகளைப் பின்பற்றாத நிலையங்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கருத்துக்களை விக்ரமன் வழங்கினார். அவருடன் கரைச்சிப் பிரதேசசபைச் செயலர் குலேந்திரன், தமிழீழ சுகாதார சேவைகளின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் காந்தா, பொதுச்சுகாதார பரிசோதகர் ரவிச்சந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### உணவகம்/தேநீர்ச்சாலை/குளிர்பானநிலையம் ஒன்றிற்கான அடிப்படை ஒழுங்குகள்

01.நிலையம் பெயர்ப்பலகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

02.கட்டடம் மெருகிடப்பட்டு தீந்தை இடப்பட்டு இருத்தல் வேண்டும். போதியளவு காற்றோட்ட வசதி இருத்தல் வேண்டும். கட்டடம் சுகாதாரப்பரிசோதகர்களின் அறிவுறுத்தல்படி பராமரிக்கப்படல் வேண்டும்.

03.தளபாடங்கள் மை பூசப்பட்டு துரு இன்றி தூய்மையாகப் பேணப்படல் வேண்டும்.

04.குடிப்பதற்கும், பிறதேவைகளுக்கும் போதியளவு சுகாதாரமான பாதுகாப்பான நீர் இருத்தல் வேண்டும். (குடிப்பதற்கு கொதித்தாறியதும், பிறபாவனைக்கு குறைந்தது வாரம் இருமுறை குளோரின் இடப்படல் வேண்டும். மாதம் ஒரு தடவை கிணறு துப்புரவாக்கப்படல் வேண்டும்.)

05.வாடிக்கையாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் சுகாதாரமான நீரடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் இருத்தல் வேண்டும். (உணவகங்களுக்கு நீர் அடைப்பு மலசலகூடம் உரிய இடத்தில் கட்டாயம் இருத்தல் வேண்டும்)

06.நிலையத்தின் உணவுபரிமாறும் மேசைகளின் அருகாக மூடிய கழிவுக்கூடை வைத்திருத்தல் வேண்டும். நிலையத்தில் சேரும் மொத்தக் கழிவுகளை மூடியுள்ள கழிவுத்தொட்டி ஒன்றில் போட்டு கிரமமாக எரித்தோ, அல்லது புதைத்தோ விடுதல் வேண்டும். தெளிவான நீர்க்கழிவுகள் யாவும் மூடிய குழாய்/கால்வாய் மூலம் மூடிய கிருமி அழிப்பு உறிஞ்சு தொட்டி ஊடாக தொட்டி ஒன்றினுள் சேர்க்கப்படுதல் வேண்டும். சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனைக்கேற்ப அல்லது கிரமமாக அகற்றிவிடுதல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் கழிவுகள் சேகரிக்கப்படும் இடம் இலையான்களின் பெருக்கிடமாக அமைதல் கூடாது.

07.சீனி, பால்மா என்பவை துருப்பிடியாத தன்மையுடைய பாத்திரத்தினுள் போடப்பட்டிருப்பதுடன், தேநீர் ஊற்றும் தட்டு துருப்பிடியாத படியும் சுத்தமாகவும் பேணப்படுதல் வேண்டும்.

08.நிலையத்தில் ரொட்டி போடப்படின் ரொட்டி போடப்படும் மேசை, ரொட்டி சுடும் தட்டு தூசி, சாம்பல் புகாத படி மூடப்பட்டிருத்தல் வேண்டும். நிலையத்தின் முன்புறமாக ரொட்டி, அப்பம் தயாரிப்பவர்கள் எரிவாயு அடுப்பினை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

09.சமைத்த உணவினை இலையான், தூசி படியாத படி பொருத்தமான மூடியினால் மூடிவைக்கப்படல் வேண்டும். கூரைப்பகுதிக்கு தூசித்தடுப்புத் தகடு (சீலிங்) அடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கண்ணாடி உணவுப்பண்டக் காட்சிப் பெட்டிகள் முழுமையாக மூடக்கூடியவையாக இருத்தல் வேண்டும்.

10.சமையலறை புகைபோக்கி உடையதாக இருத்தல் வேண்டும்.

11.நிலைய நடவடிக்கைகளுக்குப் புறம்பான பொருட்கள் நிலையத்திலிருந்து அப்புறப்படுத்தி இருத்தல் வேண்டும். நிலையத்தைப் பணியாளர்கள் தங்குமிடமாகப் பாவித்தல் கூடாது. களஞ்சிய அறை அல்லது பிரிவு தனியாக இருக்க வேண்டும்.

12. நிலைய வளவினுள் எவ்வித வளர்ப்புப்பிராணிகளோ, பறவைகளோ, எலிகளோ அல்லது நுளம்புகள், இலையான்களின் பெருக்க இடமோ வேறு நோய்பரப்பும் பூச்சிகளோ இருக்கலாகாது.

13. நிலையத்தின் பணியாளர்கள் தொற்றுநோய்களால் பாதிக்கப்படாதவர்களாக இருப்பதுடன், தற்சுகாதாரத்தைப் பேணுதல் வேண்டும். இவர்கள் கடமை நேரத்தில் புகைத்தல், வெற்றிலை போடுதல், மது அருந்துதல் ஆகாது.

14.நிலையத்திலோ, வளவிலோ புதிதாக கட்டடம் அமைத்தல் பெரும்படியாக புதிய உணவுவகை தயாரிப்பு அல்லது விற்பனை நடவடிக்கை மேற்கொள்வதாயின் முன்னனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

15.சிற்றுண்டி வழங்கும் போது மக்கள் கேட்கும் அளவில் மட்டும் வழங்குதல் வேண்டும்.

16. உணவு தயாரித்தல், பரிமாறுதல் என்பன சுகாதாரமான முறையில் இருத்தல் வேண்டும். பரிமாறுவதற்கு சுத்தமான தட்டுக்கள் பயன்படுத்தப்படுவதுடன் இடுக்கிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். (வெற்றுக்கைகளால் கையாள்தலாகாது.)

17.பரிமாறுபவர்கள் மேலங்கிகள், தலைக்காப்பு, வாய்மூக்குக் காப்புத்துணி ஆகியவை அணிதல் வேண்டும். உணவகத்தில் கடமையாற்றுபவர்கள் குறைந்தது ஆறு மாதத்திற்கு ஒரு முறை சுகாதார வைத்தியஅதிகாரியினால் மருத்துவ பரிசோதனைக்குட்பட்டு சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

18.சமையல்பகுதி திறந்தவெளிப்பகுதியுடன் எந்தவிதத்திலும் தொடர்புபடல் ஆகாது.

19.பொதி செய்யப்பட்ட உணவுகள் உரிய தகவல் அட்டையைக் கொண்டிருத்தல் வேண்டும். காலாவதியான பொருட்கள், மனிதப்பாவனைக்குதவாத பொருட்கள் விற்பனை செய்தல் ஆகாது.

20.தங்கள் நிலையத்தை சுகாதாரமாகப் பேணுவதற்கு ஏதாவது இடையூறுகள் இருப்பின் சுகாதாரவைத்திய அதிகாரிக்கு அல்லது தமிழீழ சுகாதாரசேவைகளின் மாவட்ட பொறுப்பாளருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

21.சுகாதாரப் பரிசோதகர் குழு தங்கள் நிலையத்தை எவ்வேளையிலும் தரிசிக்கலாம். அவர்களது ஆலோசனைகள் பின்பற்றப்படல் வேண்டும். எந்த ஒரு நிலையத்திலிருந்தும் அந்நிலையம் சார்பாக எவரும் ஆய்வாளர்களின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தின் அவ்இடையூறுகளின் ஒட்டுமொத்தமான பொறுப்பும் அந்நிலைய உரிமையாளரைச் சாரும்.

22.எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மேற்படி ஒழுங்கு விதிகள் மீறப்படின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (கு)

# பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள்; கிளி,முல்லை அதிபர்களுக்கு செயலமர்வு

பாடசாலை முகாமைத்துவ நுட்பங்கள் மற்றும் நூலக அபிவிருத்தியினூடாகக் கல்வி அபிவிருத்தியை முன்னெடுப்பது தொடர்பாக அதிபர்களுக்கான மூன்று நாள் முகாமைத்துவ விழிப்புணர்வுச் செயலமர்வு ஜூலை 12,13,14ஆம் திகதிகளில் கிளிநொச்சி கல்விப் பணிமனையில் நடைபெறவிருக்கிறது.

•கிளிநொச்சி வலயத்தில் நூலகப் பெருவளர்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்கள் இச்செயலமர்வில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாகாண நூலக பெருவளர்ச்சி அலகின் மாகாண நூலக இணைப்பாளரும், உதவிக்கல்விப்பணிப்பாளருமான என். அனந்தராஜ் கேட்டுள்ளார்.

மத்திய கல்வி அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலகமும் தகவல் விஞ்ஞானத்திற்குமான தேசியநிறுவகம்,மாகா ணக்கல்வித் திணைக்களம் ஆகிய வற்றின் வளவாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். செயலமர்வில் பாடசாலைகளின் அதிபர்கள் அல்லது கடமை நிறைவேற்றும் அதிபர்கள் தவிர்ந்து வேறு எவரும் அனு மதிக்கப்பட மாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வலயத்தில் 42 அதிபர்களுக்கான செயலமர்வு ஜூலை 12 தொடக்கம் ஜூலை 14 வரை கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்திலும், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த 45 அதிபர்களுக்கு ஜூலை 15 தொடக்கம் ஜூலை 17வரை மாங்குளம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும் என்றும் மாகாணக்கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் அறிவித்துள்ளார். (25,34)

# யெமகா நிறுவனக் கிளை முல்லையில் திறந்து வைப்பு

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தின் ஆதரவில் யெமகா நிறுவனத்தின் கிளை முல்லைத் தீவில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மங்கல விளக்கினை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் பாஜ் நிறுவனப் பிரதிநிதி வொய்சியும் ஏற்றினார்கள் தேசியக்கொடியினை முல்லை.மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.றங்கன் ஏற்றினார். தொடர்ந்து கட்டடங்களை ஜப்பான் யெமகா நிறுவனத்தின் ஓய்வு பெற்ற பிரதிநிதி விறாறக்ககாமா திறந்து வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை முல்லை மாவட்ட அரசாங்க அதிபர், முல்லை மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர். முல்லை பாஜ் நிறுவனப்பிரதிநிதி வொய்சி, ஓய்வு பெற்ற யெமகா நிறுவனத்தின் பிரதிநிதி றக்ககாமா ஆகியோர் நிகழ்த்தினர். இந்த நிகழ்வில் அரச சார்பற்ற பிரதிநிதிகள்,போராளிகள், பொது மக்கள் எனப்பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக் கது.

# வறியமாணவர் கல்வியை ஊக்குவிக்க மைக்ரோ நிதியுதவி

(மன்னார்)

மன்னார் "மைக்ரோ" நிறுவனம் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் கல்வி கற்பதில் ஆர்வமுள்ள மாணவர்களின் நலன்கருதி மாதாந்த ஊக்குவிப்பு தொகையினை வழங்குவதற்கான திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில் ஆறாம் ஆண்டு முதல் 12 ஆம் ஆண்டு வரையான மாணவர்களுக்கும், பலகலைக்கழக மாணவர்களுக்கும் மாதாந்தம் ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து ஐநூறு ரூபா வரையான தொகையினை வழங்கி வருகின்றது. இதன் மூலம் மாணவர்கள் தமது கல்வியில் முன்னேற்றமடை வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# கல்வியியல் கல்லூரி அனுமதியில் மட்டக்களப்பை பின்தங்கிய மாவட்டமாக கருத இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களை கல்வியியல் கல்லூரியில் சேர்க்கும் போது கல்வியில் பின்தங்கிய மாவட்ட மாணவர்களாக கருத வேண்டும் என்ற கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், எஸ். ஜெயாநந்தமூர்த்தி, அரியநேந்திரன், கனகசபை, கே.தங்கேஸ்வரி ஆகியோர் கடந்த வாரம் கல்வியமைச்சின் செயலர் தாரா டி மெல்லை சந்தித்து இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்தனர்.

இதனையடுத்து தற்சமயம் கோரப்பட்டுள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கான அனுமதியின் போது மட்டக்களப்பு மாவட்டத்தை கல்வியில்பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக் கொள்வதற்கு கல்வியமைச்சின் செயலர் இணக்கம் தெரிவித்தாக பாராளுமன்ற உறுப்பினர் ஜெயாநந்தமூர்த்தி தெரிவித்தார்.

ஏற்கனவே பல்கலைக்கழக அனுமதியில் மட்டக்களப்பு மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலவச தொழில் பயிற்சிக்கு விண்ணப்பிக்க வேண்டுகை

(முள்ளியவளை)

முல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் இலவசமாக தொழில் பயிற்சி இடம்பெறவுள்ளது.

மேற்படி தொழில் நுட்பகல்லூரியில் மேசன், மின்ஒட்டு நீர்குழாய் பொருத்தல், தச்சுவேலை ஆகியவற்றுக்கான இலவசப்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதால் பயிற்சி பெறவிரும்புவோர் எதிர்வரும் 20-07-2005ஆம் திகதிக்குள் முல்லைத்தீவு பகுதியில் அமைந்துள்ள முல்லை தொழில்நுட்ப கல்லூரியிலோ அல்லது ஒட்டுசுட்டான் பொருண்மிய மதியுரையகத்திலோ தங்கள் விபர படிவங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சியில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சார்ந்தோருக்கான முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

-பொதுக்கட்டமைப்பில்-

## தனித்தரப்பை வலியுறுத்தி முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

ஆழிப்பேரலை நிவாரண பொதுக் கட்டமைப்பு மீளாய்வு செய்யப்பட்டு முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் பரவலாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

மாவட்ட அனைத்துபள்ளிவாசல்களின் சம்மேளனத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் 23 ஜும்மா பள்ளிவாசல்கள் முன்பாக நடைபெற்றன.

வெள்ளிக்கிழமை நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்பு பள்ளிவாசல்கள் முன்பாகக் கூடிய முஸ்லிம்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு வழங்கப்படாதுவிட்டால் எந்தவொரு முஸ்லிம் கட்சியும் பொதுக் கட்டமைப்பிற்கு பிரதிநிதிகளை சிபாரிசு செய்யக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காராகளினால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருந்தது.

# சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிராக சர்வதேச நீதிமன்றம் செல்லவேண்டும்!

### ஜாதிக ஹெலஉறுமய சிறிலங்கா அரசிடம் வலியுறுத்து

இந்தியாவின் சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக அரசாங்கம் சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத்தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். பாராளுமன்ற வளாகத்தில் ஜாதிக ஹெல உறுமய கடந்த வியாழக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னதாக, பாராளுமன்ற அமர்வுகளின் போது, சேது சமுத்திரத் திட்டம் தொடர்பாக அத்துரலிய ரத்னதேரர், வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஆறு கேள்விகளை முன்வைத்தார்.

இந்திய அரசாங்கம் இலங்கையின் எல்லைப்பிரதேசத்தில் சேது சமுத்திரம் எனும் கடல்மார்க்க பாதை திட்டத்தை உங்களது அமைச்சின் அனுமதியுடனா ஆரம்பிக்கப்படுகின்றது? இந்தக் கடல் அகழ்வினால் இலங்கையின் இயற்கை வளங்களுக்கு ஏற்படப்போகும் விளைவுகள் குறித்து உங்களது அமைச்சு ஆராய்ந்துள்ளதா? அப்படி செய்திருப்பின் அது இந்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றதா? அதன்மூலம் சுற்றாடல் பாதிக்கப்படுமாயின் அது தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்ல உங்களது அமைச்சு நடவடிக்கை எடுக்குமா? அத்தோடு குறித்த திட்டத்தின் மூலம் கொழும்புத் துறைமுகம் உட்பட எமது பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்படும் பாதிப்பு பற்றி அமைச்சர் இச்சபையில் விளக்கமளிப்பாரா? ஆகிய கேள்விகளை முன்வைத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கதிர்காமர், தேரரின் கேள்விகளுக்குரிய விளக்கத்தை ஏழுபக்க அறிக்கையாக சபையில் சமர்ப்பிப்பதாகக் கூறி அறிக்கை பற்றிய சிறு விளக்கமொன்றை அளித்தார்.

சனாதிபதி இந்தியா சென்றுள்ள போது இலங்கைக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாத விதத்திலேயே சேது சமுத்திரத் திட்டம் மேற்கொள்ளப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உறுதியளித்துள்ளார்.

அத்தோடு இரு நாட்டு நிபுணர்களும் இத்திட்டத்தின் விளைவுகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், இன்னும் ஒருமைப்பாடுகள் எதுவும் எட்டப்படவில்லை எனவும் வெளிநாட்டமைச்சர் விபரித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்திய அத்துரலிய ரத்ன தேரர்,சேது சமுத்திர திட்டத்தின் மூலம் ஏதாவது பாதிப்பு இலங்கைக்கு ஏற்படுமாயின் அதற்கு வெளிநாட்டமைச்சரே பொறுப்பு கூற வேண்டும். அமைச்சர் சமர்ப்பித்துள்ள அறிக்கையின் மூலம் இத்திட்டத்தால் இலங்கைக்கு ஆபத்துக்கள் இருப்பது புலனாகின்றது. அத்தோடு இத்திட்டத்தால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து வருவதாகவும், இறுதி அறிக்கை இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்திருக்கின்றார். எனவே இது குறித்த இறுதி அறிக்கை தயாரிக்கப்படும் வரை சேது திட்டத்தை இடைநிறுத்தி வைக்க அரசாங்கம் செயற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இத்திட்டத்தால் பாரிய இயற்கை வளப்பாதிப்பு ஏற்படுமென சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அதன்மூலம் அவ்வாறான பாதிப்புக்களும் பொருளாதார சீர்கேடுகளும் இலங்கைக்கு ஏற்படுமாயின் அரசாங்கம் இந்தியாவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்திற்கு செல்லவேண்டும். இது இந்தியாவை சங்கடப்படுத்தும் நோக்கமல்ல. ஏற்படப்போகும் பாதிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாக்கத்தான். நட்புறவு தேவைதான். அதற் காக நாட்டுக்கு பாதிப்பு ஏற்படும்போது அனுசரித்து நட்புறவைப் பேண முடி யாது எனவும் அத்துரலிய ரத்னதேரர் தெரிவித்தார்.

# பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிறுவனங்களில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு தகுதியுடைய ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

**பணிநிலைகள்:-**

01.உதவிக்கணக்காய்வாளர்
02.கணக்காய்வு எழுதுனர்
03.கணக்கு எழுதுனர்

**தகைமைகள்:-**

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம். அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகள்.
02. க.பொ.த-உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்
03. க.பொ.த சாதாரணதரத்தில் வணிகப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்

**அகவை எல்லை:**

விண்ணப்ப முடிவு நாளில் 18 அகவைக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:**

ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

**வேண்டுகைக்கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி:-**

பொறுப்பாளர், ஆளணிப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை,தமிழீழம்.

**விண்ணப்ப முடிவு நாள்:- 20.07.2005**

*வேண்டுகைகள் சேர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரிகள்:*

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு | ~திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முழங்காவில் | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முள்ளியவளை | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| கிளிநொச்சி | ~விளம்பரப் பணிமனை, ஈழநாதம், யாழ்சாலை,கிளிநொச்சி. |
| பொதுஅஞ்சல் | ~ஒளிர காகிதாதிகள் விற்பனையகம், கந்தசாமி கோவிலடி, |

ஆளணிப்பகுதி,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி.12296)

# பணிநிலை வெற்றிடம்

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ/து) பிரதான வீதி முள்ளியவளை, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உட்பட்ட "ஆண்" பாலாரிடம் இருந்து பின்வரும் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**01.பதவி:-** உழவு இயந்திர சாரதி

01.சம்பளக்குறியீட்டு இலக்கம்:-312/13(31/99 சுற்றறிக்கைக்கு அமைவாக)
02.சம்பள அளவுத்திட்டம்:-(4000+1250)-5250.00
(75X10-80X10)-6800.00
03.வயதெல்லை:- 20-50
04.தகைமை:- 05 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் பஸ்/லொறி/பெட்டியுடன் உழவு இயந்திர ஓட்டுநருக்கான அனுமதிப்பத்திரமும், நான்கு வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் 2005.07.15 ஆம் திகதிக்கு முன்பதாக எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலமாகவோ, அல்லது நேரிலோ தலைவர், முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ. சங்கம் (வ-து) பிரதான வீதி, முள்ளியவளை, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

*தலைவர்,*
*முல்லை மேற்கு ப.தெ.வ.அ.கூ. சங்கம்,*
*(வ-து)*
*பிரதான வீதி, முள்ளியவளை*

(6185)




விதுஷா வைத்திய நிலையம்
இல:-143A, மன்னார் வீதி,
குருமன்காடு, வவுனியா.

புதிய பல் வைத்திய நிலையம்

விதுஷா வைத்திய நிலையத்தின் புதிய பல்வைத்திய நிலையம் பல் வைத்திய நிபுணர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★பல் பிடுங்குதல்
★பல் கட்டுதல்
★பல் கிளிப்போடுதல்
★பல் உடைவுகள் திருத்தல்
★பல் கறைகள் நீக்குதல்
★மற்றும் வாய் சம்பந்தமான ஏனைய நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்
காலை - 8 மணிமுதல்
மாலை - 8 மணிவரை

நிர்வாகம்
விதுஷா வைத்திய நிலையம்.

தொலைபேசி இலக்கம்:- 024-2223095, 024-2221252


(6339)

யாழ்ப்பாணம்



# பருவநிலைமாற்ற சீர்கேடுகளைத் தடுப்பது குறித்து எதிர்பார்த்த வெற்றியை ஜி-8 மாநாடு தரவில்லை

## -இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு



(லண்டன்)

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சீர்கேடுகளைத் தடுப்பது தொடர்பான பிரச்சினைகள் குறித்து ஜி-8 மாநாட்டின் பிரகடனம் எதிர்பார்த் தளவில் இல்லையென்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள் ளார்.

ஜி-8 மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் லண்டனில் செய்தியாளர் களிடம் கருத்துத்தெரிவிக்கையி லேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தப்பிரகடனம் தொடர்பாக ஜி-8 உறுப்பு நாடுகளிற்கிடையிலேயே ஒத்தகருத்து ஏற்படவில்லையென் றார். ஜி-8 மாநாட்டைப் பொறுத்த வரையில் இந்தியாவின் பங்குஒரு வரையறைக்கு உட்பட்டது தான் என்றும், இந்த மாநாட்டிற்குவரும்படி அழைப்பு விடுக்கப்பட்டதன் பேரில் அதில் பங்கேற்று இந்தியாவின் கருத்தை எடுத்துரைத்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

சுற்றுச் சூழலை மாசுப்படுத்தாத தொழில் நுட்பங்களை வளரும் நாடு களுக்கு வளர்ந்த நாடுகள் வழங்க வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைகுறித்த கேள் விக்கு பதிலளிக்கையில்; அம் மாநிலத்தில் புதிதாகத் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்பு இப்போது இல்லையென்றார். காஷ்மீரின் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற் காமல் இருக்கும் சில அமைப்புக்கள் வன்முறையைக் கைவிட்டு பேச்சு நடத்த முன்வந்தால் அவர்களுடன் பேச்சு நடத்த அரசு தயாராக இருப் பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேவேளை சனநாயகத்தில் நம் பிக்கையுள்ள அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டு தீவிர வாதத்தை ஒழிக்க முன்வரவேண்டு மென்று பிரதமர் மன்மோகன்சிங் வலி யுறுத்தியுள்ளார்.

லண்டனில் ஒக்ஸ்போட் பல் கலைக்கழகத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. அங்கு பிரதமர் தொடர்ந்து கருத்துத் வெளியிடு கையில்; தீவிரவாதம் என்பது கோழைத்தனமான செயல் என்றார். இதுபோன்ற பயங்கரவாதத்தை அனு மதிக்க முடியாது என்றும் அவர் தெரி வித்தார்.



ஜம்மு நகரில் காவிரி நதி அபாய அடையாளத்தைத் தாண்டி பெருக்கெடுத்துஓடத் தொட ங்கியதையடுத்து தாழ்ந்த நிலப்பகுதியில் வாழும் கரையோரப் பகுதி மக்கள் தமது உடைமைகளுடன் பாதுகாப்பானஇடங்களுக்கு இடம்பெயர்வதைப் படத்தில் காணலாம்.



தமிழக நாகபட்டினம் கடற்கரையில் சுனாமியால் அடித்து கரைஒதுக்கப்பட்ட படகொன்றில் குடிசை அமைக்கப் பட்டுள்ளது.

# இந்தி நடிக,நடிகைகளுக்கு போதைப்பொருள் விற்றவர் கைது

இந்தி நடிக நடிகைகளுக்குப் போதைப்பொருள் விற்றுவந்த குற்ற வாளி ஒருவர் டில்லி பொலிசாரால் பிடிக்கப்பட்டுள்ளார்.

ஷரப்த் ஷேக் (வயது 35) என்பவரே கைதானவராவார். ராவான் பீகார் பகுதியைச் சேர்ந்த ஷேக் டில்லிப்பகுதியில் 15 வயதிலிருந்து வழிப்பறி, கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டுவந்து கடந்த ஐந்து ஆண்டு களாகப் போதைப்பொருள் விற்பனை யில் ஈடுபட்டுவந்துள்ளார். இதனூடாக இந்திய நடிக, நடிகைகள் பலருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குப் போதைப்பொருட்களை விற்று ஷேக் கோடீஸ்வரனானாரென பொலிசார் தெரிவிக்கின்றனர்.

டில்லியில் போதைப்பொருள் கடத்தலில் பிரபல்யமான ஷேக் கடந்த பலவருடங்களாக பொலி சாரால் தேடப்பட்டுவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலா சென்ற மாணவிகள் காணாமல் போனமையால் பரபரப்பு

தமிழகம் பன்ருட்டி அருகே சுற்றுலா செல்வதாகக் கூறிச்சென்ற 50 மாணவிகள் மாயமாய் காணாமல் போயுள்ளனர். இதைத் தொடர்ந்து குறித்த பாடசாலையைப் பெற் றோர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் பன்ருட்டி பகுதியிலுள்ள சிற்றூரில் உள்ள அரச மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 50 மாணவிகள் கடந்த ஐந்தாம் திகதி சுற்றுலா சென்றிருப்பதாக அறிவிக் கப்பட்டிருந்தது. ஆனால் நான்கு நாட்கள் ஆகியும் மாணவிகள் வீடு திரும்பாமையினால் அதிர்ச்சி யுற்ற பெற்றோர்கள் பலர் பாடசாலை யினை முற்றுகையிட்டுள்ளனர்.

இது பற்றி பாடசாலை அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்; பாட சாலையிலிருந்து எந்த மாணவி களும் சுற்றுலா செல்லவில்லை யென தெரிவித்திருக்கிறார். இதைக் கேட்ட பல பெற்றோர் அதிர்ச்சியுற் றுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

# சாவு அறிவித்தல்

## சிவஞானசுந்தரம் சுஜீபன்

யோகபுரம் மல்லாவி இல-701 ஐப் பிறப்பிடமாகவும், வயம்பை பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவனுமாகிய சிவஞானசுந்தரம் சுஜீபன் 06.07.2005 அன்று அகால மரணமடைந்துள்ளார். அன்னார் சிவஞானசுந்தரம் சிவலோக நாயகி ஆகியோரின் அன்பு மகனும், சுபாஜினி (சுவிஸ்), சிவகாந்தி (ஆசிரியர் உயிலங்குளம் அ.த.க பாடசாலை), தயாளன் (வெளிவாரிப்பல்கலைக்கழகம் மட்டக்களப்பு), லோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரனும், கிருபாகரன் (சுவிஸ்), கவிதா (ஆசிரியை 4 ஆம் யூனிற் அ.த.க பாட சாலை மல்லாவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரணியா, அருணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிசிகாவின் அன்புச்சித்தப்பாவும், திருதிருமதி மோசெஸ், திரு திருமதி புவனேஸ்வரன், திருதிருமதி உருத்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், திருதிருமதி சிவபாலசிங்கம், திருதிருமதி ஜெகதீஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும், திருதிருமதி சண்முகலிங்கம், திருதிருமதி சிறி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், திருமதி ஐயாத்துரை, திரு வீரசிங்கம், திருதிருமதி காசிநாதர் ஆகியோரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல:701 மல்லாவியில் உள்ள அவரது இல்லத்தில் 11.07.2005 திங்கள் காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து, பூதவுடல் அனிஞ்சியன்குள இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6007)

### பொடோ சட்ட இரத்து குறித்து அத்வானியின் கருத்துக்கு வாசன் கண்டனம்

(புதுடில்லி)

பொடோ சட்டத்தை ரத்து செய்த தீவிரவாதத்திற்கு காங்கிரஸ் கூட்டணி அரசு துணை போய்விட்டதாக பாரதிய ஜனதா கட்சித்தலைவர் அத் வானி குற்றம் சாட்டியிருப்பதை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஜி.கே.வாசன் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது; முந்தைய பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சியில் பொடோ சட்டம் அமுலில் இருந்தபோதுதான் டில்லி யில் நாடாளுமன்றத்திலும், குஜராத் தில் அக்சர்தம் கோயிலிலும் தீவிர வாதிகள் தாக்குதல் நடத்தினார்கள் என்பதை சுட்டிக்காட்டினார்.

# கட்டுமரங்களுக்கு இறக்கை

விமானங்களுக்குப் போன்று கட்டுமரங்களுக்கும் இறக்கைகள் இணைக்கப்படும் காலம் விரைவில் வரப்போவதாக நம்பப்படுகிறது. நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சர்.சி.வி. ராமனின் மகன் ராதாகிருஷ்ணன் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இந்த புதுமையான முயற்சியில் ஈடு பட்டது.

வானியல் மாற்றும் வான் இயற் பியலில் ஆற்றிய பங்களிப்புக்காக ராதாகிருஷ்ணனுக்கு எம்.பி. பிர்லா நினைவு விருது வழங்கும் விழா கொல் கத்தாவில் நடைபெற்றது. விருதைப் பெற்ற பின்னர் நிருபர்களிடம் ராதா கிருஷ்ணன் கூறியதாவது;

இறக்கைகளுடனான கட்டுமரங் களை வடிவமைக்கும் திட்டத்துக்குப் பாதுகாப்பு ஆராய்ச்சி வளர்ச்சி அமைப் பும், இஸ்ரோவும் நிதியுதவி செய்கின் றன. நாங்கள் உருவாக்கியுள்ள மொடல் கட்டுமரத்தின் நீளம் 15 மீற் றர், அகலம் 8 மீற்றர் அத்துடன் வேகமாகவும், சொகுசாகவும் பயணிக்க 15 மீற்றர் உயர இறக்கை உண்டு.

இந்த இறக்கை கட்டுமரங்களை எலக்ரோனிக் சாதனங்கள் கொண்டு இயக்கலாம். காற்றின் வேகத்தில் பாதியளவு வேகத்தில் இந்தக் கட்டு மரம் செல்லும்.

இறக்கைகள் பொருத்தப்பட்ட கட்டுமரங்களை வர்த்தக ரீதியில் தயார் செய்யவும் வாய்ப்புண்டு. ஆனால் அது பற்றி இப்போது பேச விரும்ப வில்லை. கடல் பயணத்தில் எனக்கு விருப்பம் இருந்ததால் தான் இதை தயாரித்துள்ளன் என்றார் ராதா கிருஷ்ணன்


### சங்க கால துறைமுகம் ஆய்வு

(சென்னை)

தமிழகம் பட்டுக்கோட்டை அருகே சங்ககாலத்தில் இருந்த தான துறைமுகங்கள் பற்றிய ஆய்வொன்று நடைபெறவுள்ளது.

மாமல்லபுரத்தில் கடலுக்கடி யில் உள்ள முருகன் கோவில் பற்றியும் ஆய்வு நடைபெற்று வருகிறது.

தென்இந்திய, தமிழகம் பகுதியில் சில நூற்றாண்டு களுக்கு முன் இருந்த சங்க காலம் எனும் தமிழன் பாரம்பரிய வரலாற்றுச் சுவடுகள் தமிழக கடற்கரையோரங்களிலும் கடலுக் குள்ளும் காணப்படுகின்றது. இது பற்றிய ஒரு முழுமையான ஆய் வொன்றை செய்யுமுகமாகவே இத்துறைமுகம் பற்றி ஆய்வு இடம்பெறவுள்ளதாகத் தெரிகிறது.



அண்மையில் இந்தியா முழுவதும் சி.பி.ஐ அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடிச் சோதனையில் சிக்கிய தமிழக சுங்க அதிகாரியின் வீடு

# "அஸ்ரா" கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர்

# கிளி.ம.வி.வீரர் சஞ்சீவன் பந்து வீச்சில் அபாரம்


யாழ். ஹாட்லி கல்லூரி அணியுடனான 'அஸ்ராக்கிண்ண' கடினப்பந்துப் போட்டியில் கிளி. ம.வி. வீரர் வா. சஞ்சீவன் 11 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார்.

நேற்று முன்தினம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில்நடைபெற்ற 15 வயதுப் பிரிவு அணியினருக்கிடையேயான இந்தப் போட்டி யில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளி.ம.வி அணித்தலைவர் ஆ.அனுசாந் ஹாட்லி அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். முதல் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய அவ்வணி 40 ஓவர்களில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப்பெற்றது.அவ்வணி சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ராஜீவ்கரன் 64 ஓட்டங்களையும், கரிகரன் 32 ஓட்டங்களை யும், நிதர்சன் 30 ஓட்டங்களையும், ஜெயநந்தன் 24 ஓட்டங்களையும், ஜோன் மிராஜ் 23 ஓட்டங் களையும், கோபி சங்கர் 12 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளி. ம.வி சார்பாக வா.சஞ்சீவன் ஒன்பது ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக்கொடுத்து, ஆறு விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார்.

தமது முதலாவது இன்னிங்சிற்காக துடுப் பெடுத்தாடிய கிளி. ம.வி. அணி 60.4 ஓவர்கள் நிறைவில் 171 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. கிளி. ம.வி சார்பாக சிறப்பாக துடுப்பெடுத்தாடிய ம. ஜனகன் ஐந்து பவுண்டரிகள் உட்பட 33 ஓட்டங் களையும், அணித்தலைவர் ஆ. அனுசாந் மூன்று பவுண்டரிகள் உட்பட 30 ஓட்டங் களையும், க. சஞ்சீவன் ஒரு சிக்ஸர் மூன்று பவுண்டரிகள் உட்பட 23 ஓட்டங்களையும், சி.கிருபாகரன் மூன்று பவுண்டரிகள் உட்பட 23 ஓட்டங்களையும், அணியின் உபதலைவர் வா. சஞ்சீவன் நாலு பவுண்டரிகள் உட்பட 22 ஓட்டங்களையும், க. செந்தூரன் இரண்டு பவுண டரிகள் உட்பட பத்து ஓட்டங்களையும் சி.ரஞ்சீப் ஆட்டமிழக்காமல் இரண்டு பவுண்டரிகள் உட்பட ஒன்பது ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். ஹாட்லிக் கல்லூரி சார்பாக ரஜீவ்கரன் நான்கு விக் கெட்டுக்களையும், நிதர்சன் மூன்று விக் கெட்டுக்களையும், தகீசன், அன்ரனி ஜோன்சன், கரிகரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டி னையும் பெற்றனர். மீதமாக பத்து ஓவர்கள் இருந்த நிலையில் தமது இரண்டாவது இன்னிங்சைத் தொடர்ந்த யாழ்.ஹாட்லிக் கல்லூரி அணி கிளி.ம.வியின் உப தலைவர் வா. சஞ்சீவனின் சுழல்பந்து வீச்சில் அடுத்தடுத்து தமது இலக்கு களை இழந்தனர். பத்து ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்த ஹாட்லி அணி 39 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். ஐந்து ஓவர்கள் பந்து வீசிய வா.சஞ்சீவன் 12 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். யோ. நிரோசன் ஐந்து ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

துடுப்பாட்டத்தில் ஜோன்மிராஜ் 18 ஓட்டங் களைக் கூடுதலாகப் பெற்றார். போட்டி சம நிலையில் முடிவடைந்த போதும் யாழ். ஹாட்லி அணியினர் கூடிய புள்ளிகளை முதல் இன்னி ங்ஸ் மூலம் பெற்றனர்.



வாமதேவன் சஞ்சீவன்

*சுழற்பந்து வீச்சாளரான இவர் ஸ்கந்தரோதயா கல்லூரிக்கு எதிராக கடந்தமாதம் ஆறு விக்கெட்டுக்களையும் இப்போட்டியில் 11 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.*

கிளி. ம.வி.யின் 15 வயதுப் பிரிவு அணி யினர் இப்போட்டியிலேயே கூடுதல் ஓவர்கள் (60.1) நின்று ஆடியுள்ளனர். அத்துடன் இது வரையில் பெரியபுலம் ம.விக்கு எதிராக அடித்த 160 ஓட்டங்களேகூடுதல் ஓட்டமாக இருந்து வந்தது. தற்போது ஹாட்லிக்கு எதிராகப் பெற்ற 171 ஓட்டமே இவ்வணியினரின் கூடுதல் ஓட்டமாக இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நட்புறவு கால்பந்து போட்டி

நட்புறவு உதைபந்தாட்டப் போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் உதய தாரகை விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் மாலை உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்ற மேற்படி நட்புறவு ஆட்டத்தில் இரு அணிகளும் கலந்துகொண்டன.

இறுதியாக நோர்வேயில் இருந்து வருகை தந்த உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் உதைபந்தாட்ட வீரரான பத்தன் அவர்களால் உதயதாரகை அணியினருக்கு நினைவுப்பரிசில் வழங்கப்பட்டது.

மேற்படி போட்டிக்கு மத்தியஸ்தராக க.புவனேந்திரராஜா கடமையாற்றினார்.

## பருத்தித்துறை லீக் நடாத்தும் கால் பந்தாட்ட சுற்றுப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் நடாத்தும் ஒன்பது பேர் பங்குகொள்ளும் விலகல் முறை யிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வதிரி பொமேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகிறன.

இன்றைய ஆட்டத்தில் பருத்தித்துறை நக்கீரன் அணி, எதிர் அல்வாய் மனோகரா அணி எதிர் நவசக்தி அணியும் மோதுகின்றன. நாளை வல்வெட்டி கருணாகரன் அணி எதிர் பொதிகை விநாயகர் அணியும் ஞானம்ஸ் அணி எதிர் கல்வனை விநாயகர் அணியும் மோதவுள்ளன. நாளை மறுதினம் இளவாலை யங்கென்றிஸ் அணி எதிர் வதிரியம்மன் அணியும் கொற்றாவத்தை சிவானந்தா அணி எதிர் வல்வெட்டி ஒற்றுமை அணியும் மோத வுள்ளன. (கீ)

## இந்திய கிரிக்கெட் அணியின் நடுநாயகம் ராகுல் ராவிட்

### -புகழ்கிறார் கபில்தேவ்



இந்திய கிரிக்கெட் அணியின் துடுப் பாட்டத்திற்கு ராவிட்டும் பந்து வீச்சுக்கு அனில் கும்ளேயும் முதுகெலும்பாக இருக்கின்றனர் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில் ; கடந்த ஆண்டில் ராகுல் ராவிட் நான் கனவில் நினைத்ததை விட அதிகம் சாதித்துள்ளார். அவர் 12 டெஸ்டில் 946 ஓட்டங்களை குவித்துள்ளார். இந்திய துடுப் பாட்டத்தின் நடுநாயகம் ராவிட் என்பது இதிலிருந்து உண் மையாகிறது.

அனில் கும்ளே நாளுக்கு நாள் ஆட்டத்தில் ஜொலித்து வருகிறார். கடந்த ஆண்டில் அவரது சாதனை நிலையாக இருந்தது கடந்த 12 டெஸ்டில் 74 விக்கெட்டுக்களை கைப் பற்றியுள்ளார். அதில் இரண்டு முறை பத்து விக்கெட்டுகள் வீழ்த்தியதும் ஆறு முறை ஐந்து விக்கெட்டுக்களை விழ்த்தியதும் அடங்கும்.

16 வயதில் இருந்தே சச்சின் டெண்டுல்கரின் பரிணாம வளர்ச்சியை நான் பார்த்து வருகிறேன். தற்போதைய நவீன காலத்தில் அவர்தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதில் சந்தேக மில்லை. அவர் இந்திய கிரிக்கெட்டுக்கு இன்னும் அதிக பங் களிப்பு செய்ய வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## முக்கோண ஒரு நாள் கிரிக்கெட்போட்டி முதல் போட்டி 30 ஆம் திகதி தம்புள்ளையில்

சிறிலங்கா, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் போட்டி எதிர்வரும்30 ஆம் திகதி ஆரம்ப மாகவுள்ளது.

போட்டி விபரம் வருமாறு.

யூலை 30-இந்தியா எதிர் சிறிலங்கா (தம்புள்ள)
யூலை 31- இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவு (தம்புள்ள)
ஓகஸ்ட் 2 - சிறிலங்கா எதிர் மேற்கிந்தியத் தீவு (தம்புள்ள)
ஓகஸ்ட் 3- சிறிலங்கா எதிர் இந்தியா (தம்புள்ள)
ஓகஸ்ட் 6- சிறிலங்கா எதிர் மேற்கிந்தியத் தீவு (கொழும்பு)
ஓகஸ்ட் 7-இந்தியா எதிர்மேற்கிந்தியத்தீவு (கொழும்பு)
ஓகஸ்ட் 9- இறுதிப்போட்டி (கொழும்பு)

மேற்படி போட்டிகள் அனைத்தும் இரவு பகல்ஆட்டங்களாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்கிந்தியத்தீவு, சிறிலங்கா அணிக ளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் 13 ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஆரம்ப மாகின்றது.

மேற்படி இருபோட்டித் தொடர்களையும் ரூபவாஹினி ஐ அலைவரிசை ஒளிபரப்பு செய்கின்றது.




## நட்வெஸ்ட் கிண்ண கிரிக்கெட் இரண்டாவது போட்டி இன்று





இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தட்டுத் தடுமாறி வரும் நிலையில் நட்வெஸ்ட் கிண்ணத் துக்கான இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகின்றது.

இப் போட்டியில் தனது துல்லியமான பந்துவீச்சை இழந்து வரும் அவுஸ்திரேலியாவின் கிளஸ்பி நீக்கப்பட்டு புதிய வீரர் இணைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணியிடம் படுதோல்வியை சந்தித்தது.

இதேவேளை இங்கிலாந்தில் தொடர் குண்டு வெடிப்பு இடம் பெற்றாலும் தாங்கள் அங்கேயே தங்கியிருக்கப் போவதாக அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தெரி வித்துள்ளார்.


இங்கிலாந்து அணித் தலைவர் மைக்கல்வோன் தெரி விக்கையில்; எமது உறவுகளில் 70 உயிர்கள் பிரிந்துள்ள சோகத்திலும் ஏராளமான உயிர்களை மகிழ்ச்சிப் படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.




2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை நடத்[illegible]வாய்ப்பைப் பெற்[illegible] மகிழ்ச்சியைக் கொண்[illegible] இங்கிலாந்து ரசிகர்கள்.

## கராச்சியில் இங்கிலாந்து அணி ஆடமறுத்தால் தொடரையே ரத்துசெய்ய வேண்டும்

### -மியான்டட்



கராச்சியில் இங்கிலாந்து அணி ஆட மறுத்தால் தொடரை இரத்துச்செய்ய வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன் னாள் தலைவர் ஜாவிட் மியான்டட் தெரி வித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு சுற்றுலாவை மேற் கொள்ளும் இங்கிலாந்து அணி அந்நாட்டுடன் மூன்று டெஸ்ட் மற்றும்ஐந்து ஒரு நாள் போட்டி களில் கலந்துகொள்ளவுள்ளது.

ஆனால் பாதுகாப்பை காரணம்காட்டி பாகிஸ் தானின் துறைமுக நகரான கராச்சியில் இங் கிலாந்து விளையாட மறுத்துள்ளது.

இந்நிலையில் இஸ்லாமபாத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த மியாண்டட் தெரிவிக்கையில்,

இது எமக்கு ஏமாற்றமளிக்கிறது. பாகிஸ்தான் அரசு மற்றும் கிரிக்கெட்சபை போதுமான பாதுகாப்பு அளிக்க உறுதியளித்தும் இங்கிலாந்து அணி கராச்சியில் விளையாட மறுப்பது கிரிக்கெட் தொடரையே அவமதிப்பது போன்றதாகும். பாதுகாப்புக் குறித்து நேரடியான கார ணம் எதையும் அந்த நாடு கூறாவிட்டால் பாகிஸ்தான் சபை அந்நாட்டு அணியை கராச் சியில் விளையாட கட்டாயம் நிர்ப்பந்திக்க வேண்டும். அல்லது தொடரை இரத்துச் செய்துவிட வேண்டும். இம்மாதிரியான பிரச்சினைகளால் விளையாட்டு உறவு மட்டுமல்லாது பொருளாதாரம், அரசியல் மேம்பாடுகளும் பாதிக்கப்படும் என்றார்.

## பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டி சோமி மைக் ஈவன் வெற்றி

பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப் போட்டியின் ஏழாவது சுற்றில் அவுஸ்திரேலியாவின் சோமிமைக் ஈவன் வெற்றிபெற்றுள்ளார்.

228 கிலோமீற்றர் தூரத்தைக் கொண்ட ஏழாவது கட்டப் போட்டி நேற்று நிறைவு பெற்றது.


மைக் ஈவன் ஐந்து மணித்தியாலங்கள் மூன்று நிமிடம் 45 செக்கன்களில் போட் டியை நிறைவு செய்தார்.

சுவீடனின் மைக்ராஸ் இரண்டாவது இடத் தையும் அவுஸ்திரேலியாவின் பேணாட் யப்ரிக் மூன்றாவது இடத்தையும் பெற்றனர்.

இந்தப் போட்டித் தொடரில் அமெரிக் காவின் லான்ஸ் ஆம்ஸ்ரோங் முன்னணியில் உள்ளார். இரண்டாம் இடத்திலும் அமெரிக்க வீரரேயுள்ளார்.

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக-வீரப்புலிகளாக மாறவேண்டும்; தாழ்ந்துபோன தமிழினம் வீரப்புலி இனமாக மாறவேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 10-07-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## மிரட்டலல்ல.....!

விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்கான பாதுகாப்பிற்கு சிறிலங்கா அரசு உத்தரவாதம் அளிப்பதற்கென விடுதலைப்புலிகள் விதித்திருந்த காலக்கெடு முடிவடைய இன்னமும் நான்கு தினங்கள் மட்டுமே உள்ளன. ஆயினும், அரசு தரப்பிலிருந்து இது தொடர்பாக பதில் எதுவும் கிடக்கப்பெற்றதாக இல்லை.

புலிகளுடனான சந்திப்பின்பின் சிறிலங்கா அரசிற்கு இது தொடர்பாக விளக்கம் அளித்திருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அரசாங்கத்தின் பதிலுக்குத் தாம் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ள அதேவேளை அரசாங்கத்தின் பதில் சாதகமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனும் பேசியுள்ளார்.

ஆனால் இரு தினங்களுக்கு முற்பட்ட பத்திரிகைச் செய்தி ஒன்றின் பிரகாரம் விடுதலைப்புலிகளின் போக்குவரத்தின்போது பாதுகாப்பு அளிக்கவேண்டியதேவை தமக்கு இல்லை. அத்தகைய விதி எதையும் போர்நிறுத்த உடன்பாடு கொண்டதாக இல்லை எனவும் அரசாங் கத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அரசாங்கத்தரப்பில் கூறுவதுபோன்று போக்குவரத்தின்போது விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் அரசிற்கு இல்லை எனக் கூறுவது சமாதான முயற்சிகளில் அரசாங் கம் கொண்டுள்ள அக்கறையின்மையையே வெளிக்காட்டுவதாயுள்ளது.

யுத்த நிறுத்தஉடன்படிக்கையின்படி சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் விடுதலைப்புலிகள் நிராயுதபாணிகளாகவே அனுமதிக்கப்படுகின்றனர். ஆகையினால், அப்பகுதியில் விடுதலைப்புலிகளின் பாதுகாப்பிற்கு ஆயுதப்படைத்தரப்பே பெறுப்பேற்க வேண்டும்

இந்த வகையில் நிராயுதபாணிகளாக விடுதலைப்புலிகள் இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியில் பயணங்கள் மேற்கொள்ளும்போது அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பது இராணுவத்தரப்பின் கடமையாகிறது. ஏனெனில் அப்பகுதியின் பாதுகாப்பிற்கு இராணுவத்தரப்பே பொறுப்பாக உள்ளது.

அடுத்தாக சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கும், யுத்த நிறுத்தம் பேணப்படுவதற்கும் புலிகளுக்குப் பாதுகாப்பு அளித்தல் என்பது அவசியமானதாகும். ஏனெனில் புலிகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுமானால் யுத்தநிறுத்தம் நீடிப்பது கேள்விக்குள்ளானதாகிவிடும்.

அதுமட்டுமன்றி அரசாங்கத்தரப்பு ஏற்கனவே விடுதலைப்புலிகளின் போக்குவரத்திற்குப் பாதுகாப்பு வழங்கி வந்துள்ளது. ஆகையினால் விடுதலைப்புலிகள் தமது போக்கு வரத்திற்கு சிறிலங்காப் படையினரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும் எனக் கோருவது புதிதானதொரு விடயம்மல்ல,இதேவேளை ஒரு தரப்பினர் புலிகளின் வழமையான மிரட்டும் பாணியிலானது எனக் கருதுவதாகவும் தெரிகின்றது. ஆனால் இவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். அதாவது விடுதலைப்புலிகள்பகிடி விடுவதில்லை என்பதை.

இதேசமயம் விடுதலைப்புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தயாராக இல்லாது போனால் விடுதலைப்புலிகள் தமது போக்கு வரத்திற்கென பழையமார்க்கங்களையே கைக்கொள்ள வேண்டிவரும் இதனை அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும் சுட்டிக்காட்டத்தவறவில்லை.


அதாவது இத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் விடுதலைப்புலிகள் வடக்கிற்கும் கிழக்கிற்குமான தமது பயணங்களை இரகசியமானதாகவே மேற்கொள்ளவேண்டியதான சூழ்நிலை ஏற்படும். இத்தகைய சூழ்நிலை ஒன்று உருவாகும் பட்சத்தில் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவது என்பது சாத்தியமற்ற தொன்றாகவே இருக்கும்.

ஆகையினால் விடுதலைப்புலிகளின் காலக்கெடு என்பது பொருட்படுத்தத் தேவையற்றது என்றோ விடுதலைப்புலிகளின் நிபந்தனை போர்நிறுத்தத்திற்குள் உட்பட்டதல்ல என்றோ அரசாங்கத்தரப்பு கூறுவதும், நடவடிக்கை எதும் மேற்கொள்ளாது இருப்பதும் சமாதானம் குறித்த அரசாங்கத்தின் அசிரத்தையையே வெளிக்காட்டுவதாக இருக்கும்.

அது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு பதிலளிக்காது புறம் தள்ளிவிட்டு பின்னர் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு விடுதலைப்புலிகளைக் குறைசொல்வது ஏற்புடையதொன்றாக இருக்க மாட்டாது. அரசாங்கம் உரிய பாதுகாப்பு அளிக்காதுவிட்டால் விடுதலைப்புலிகள் தமது பாதுகாப்பை உறுதிசெய்யமுற்படுவதை எவரும் தவறு எனக்கூறிவிடவும்முடியாது.

# கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் அவர்களின் நினைவாக

### கரும்புலியின். எண்ணம்



பூவாக உம்மை
எண்ண மறந்தீர்
புயலெனவே எழுந்த - புதுப்
புயங்கள் திறந்தீர்
புலியென முகவரிகள் வரைந்தீர்
கரு மேகங்கள் கலைய
கரு வேங்கை எனவாகி
கரிகாலன் ஆணைகொண்டு
பகைவன் நிலை நோக்கி - விசைப்
படகேறி விரைந்தீர்
விரல்கள் அசைத்த போதும்
வெடிகள் அதிர்ந்த போதும்
“தமிழ்இனம், மொழி ,தமிழ்நிலம”;
முத்தான வாசகங்கள் மொழிந்தீர் - உமக்குள்
உயிர் பெற்றுக்கொண்ட எண்ணங்களை
உயர் தலைவனுக்குள் வளர்த்தெடுத்தீர்
உலக வரைபட மொன்றில்
உதய மாகும் நாடொன்றில்
தாய், தந்தையரை இழந்த
தாய்க் குலத்தின் குழந்தைகளுக்கு
தாயும் தந்தையும்தலைவன் -
தான் என உரைத்தீர்-புலியே
உம் எண்ணங்களுக்குள்
எமக்காய் நந்தவன சோலை தந்தீர்
கரும் புலியே!
எமக்காய் கருவறை சமைத்தீர்
உனக்காய் கல்லறை கூட
இல்லாத போது.

**சோலைக்கதிர்**
(காந்தரூபன் அறிவுச்சோலை)

# தமக்குள் பிரச்சினைகள் இல்லையாம்; அநுராவும், பிரதமரும் கூறுகின்றனர்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் தமக்கும் இடையில். எந்தவித பிரச்சினையும் இல்லையென அமைச்சர் அநுராபண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

சில்பிரதமருக்கும்,தமக்குமிடையே பிரச்சினை உண்டு எனக் காட்ட முனைவதாக அவர் தெரிவித்தார்.

பியகம எல்லந்தொடுவ நீர்த் திட்டத்தை திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கையில:,

எனக்கும் அநுரா பண்டார நாயக்காவுக்கும் இடையே நீண்ட கால உறவு நிலவுகின்றது.

இருவரும் 1970 ஆம் ஆண்டு அறிமுகமானோம். அதாவது 35 வருடங்கள் பழகியுள்ளோம்.

எம்முடன் ஒன்றாகஅவர் பாத யாத்திரை சென்றுள்ளார். நாடுகளுக்கு பயணம் செய்துள்ளோம் வெவ்வேறு போராட்டங்களை அரசாங்கங்களுக்கு எதிராக ஆரம்பித்தார்.

எங்களிடம் எந்தப்பிரச்சினையும் இல்லை இக்கூட்டத்திற்கு வரும் போது கூட இருவரும்ஒரே காரிலேயே வந்தோம் எனத்தெரிவித்தார்.

# பண்டிதர் வீ. பரந்தாமன் நூல் வெளியீடு நேற்று சிறப்புற இடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

பண்தடிர் வீ. பரந்தாமனின் வேர் அடிவழித்தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகர முதலி நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற்றது.

நேற்றுக்காலை பத்து மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் முனைவர் சி.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்றஇந் நிகழ்வில் பொதுச் சுடரினை வணிக ஒன்றியத்தலைவர் ஜெயராசா, யாழ் பல்கலைக்கழக பதில்பீடாதிபதி நித்தியனந்தன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியை யாழ்.பல் கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் சண்முகதாஸ் ஏற்றினார்.

நிகழ்வில்வரவேற்புரையை யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரை யாளர் முனைவர் மா. இரகுநாதன் நிகழ்த்த வாழ்த்துரையை யாழ் பல்க லைக்கழக பதில் பீடாதிபதி நிகழ்த்தினார்.

நூல் வெளியீட்டுரையை யாழ் மாவட்ட அரசியல்துறைப்பொறுப் பாளர் சி. இளம்பரிதியும் அறிமுக வுரையை முனைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாசும் மதிப்பீட்டு உரையை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் செ.திரு நாவுக்கரசு, பேராசிரியர் அ.சண்முக தாஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல்முதற் பிரதியை யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. இளம்பருதியிடமிருந்து யாழ்மாவட்ட கல்விமேம்பாட்டு பேரவையின் தலைவி செல்வி திலகவதி பெரியதம்பி பெற்றுக் கொண்டார்..

இந்நிகழ்வில் எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் மாணவர்கள் (27)

# புகையிரத சேவை கட்டணங்கள் இம்மாத இறுதிக்குள் அதிகரிக்கும்

(கொழும்பு)

புகையிரத சேவைக் கட்டணங்கள் இம்மாத இறுதிக்குள் அதிகரிக்கப்படும்என்று போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை இரண்டு தடவைகள் அதிகரிக்கப்பட்டிருந்த போதும் புகையிரத சேவைக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை.

தற்போது ஒரு கிலோ மீற்றருக்கு 36சதம் வீதம் அறவிடப்படுகிறது. இத்தொகையில் புகையிரதத்தை இயக்கமுடியாது.

பருவகாலச்சீட்டு வைத்திருப்போரிடம் கிலோ மீற்றருக்கு பத்துச் சதம் வீதமே அறவிடப்படுகிறது.இதனால் இம்மாத இறுதிக்குள் புகையிரதக் கட்டணங்களை அதிகரிக்க எண்ணியுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# வனப்பாதுகாப்பு இலாகாவினால் கள்ள மரங்கள் கடத்தல்

(தம்பான)

வனஇலாகா உத்தியோகத்தர்களும், கிராம சேவையாளர்களும் இணைந்து தம்பாவனத்தில் இருக்கும் பெறுமதி வாய்ந்த மரங்களை களவாக வெட்டிக் கடத்தி வருவதாக தம்பான வேடுவர்கள் அரசாங்கத்திடம் முறையிட்டுள்ளனர். தம்பான வேடுவ ஆதிகுடி மக்கள் நான்கு தலை முறைக்கு மேல் வாழ்ந்து வந்த தம்பான காட்டுப் பகுதியை பாதுகாப் பதற்காக அரசாங்கத்தால் வனபாது காப்பு உத்தியோகத்தர்களும் கிராம சேவையாளர்களும் நியமிக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த வன இலாகா உத்தியோகத்தர்களும், கிராம சேவையாளர்களும் ஒன்றிணைந்து தம்பான வனத்தில் இருக்கும் பெறுமதிவாய்ந்த முதிரைமரங்கள், பாலைமரங்கள் மற்றும் தேக்குமரங் களை களவாக வெட்டி வாகனங் களில் கடத்துகின்றனர்.

அதனால் பரம்பரையாக வாழ்ந்து வந்த கிராமம் அழியும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றது. இந்த வன அழிப்பால் எதிர்கால சந்ததியினர் களின் வாழ்க்கை பாதிக்கப்படும். இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்திடம் தம்பான வேடுவத் தலைவர் வன்னி.யா கோரிக்கை விடுத்துள்ளார்.

# நவாலிப் படுகொலையின் 10 ஆம் ஆண்டு;
# நேற்று சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் அனுஷ்டிப்பு

(நல்லூர்)

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் 95 ஆம் ஆண்டு இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியான 147 பேரின் 10 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வுகள் நேற்று மாலை 5.15 மணிக்கு நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் வணபிதா பி. நேசராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இறந்தவர்களுக்கான இரங்கல் திருப்பலியை யாழ். மாவட்டபேராயர் தோமஸ் சௌந்தரநாயகம் நிறைவேற்றினார்.

இறந்தவர்களின் நினைவாக மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்திய அணியுடன் மலர்வளையம் எடுத்துவரப்பட்டு இறந்தவர்களின் படங்கள் இருந்த இடத்தில் வைக்கப்பட்டது.

இத்துடன் இறந்தவர்களின் பத்தாண்டைக் குறிக்கும் முகமாக பத்துத் தீபங்கள் ஏற்றிவைக்கப்பட்டது. தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

# படையினரின் முகாம் அகற்றல் பொது மக்கள் மகிழ்ச்சி

மன்னார் வங்காலை தோமஸ்புரி பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம் அங்கிருந்து முற்றாக அகற்றப்பட்டமை தொடர்பில் பிரதேச மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

கடந்த பத்து வருடங்களாக தனியார் காணி ஒன்றில் முகாம் அமைத்திருந்த படையினர் வீட்டு உரிமையாளர் கொடுத்த அழுத்தம் காரணமாகவும், கிராமமக்கள் தொடர்ச்சியாக விடுத்த கோரிக்கையின் காரணமாகவும் அங்கிருந்து அகற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# லண்டன் தொடர் குண்டுவெடிப்பின் பின் இலங்கைப் பெண்ணை காணவில்லை

(லண்டன்)

லண்டன் குண்டுவெடிப்பு சம்பவத்தில் இலங்கை தமிழ் வம்சாவளி பெண்ணொருவர் காணாமல் போய் உள்ளதாக பி.பி.சி தெரிவித்துள்ளது.

சனோயா (வயது-26) என்ற பெண்ணே காணாமல் போயுள்ளார். குண்டு வெடிப்புக்கள் நடைபெற்ற அன்று லண்டன் 'காஸ்ரன்' பகுதியிலிருந்து காலை புகையிரதத்தில் பயணித்துள்ள சானோயாவின் நிலை என்னவானது எனத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனது மகளின் நிலையறியாத சனோயாவின் தாயார் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட போதும் தனக்கு எவரும் உதவியளிக்கவில்லை யென கண்ணீர்மல்க தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க வின் மக்கள் சக்திப்பேரணி நேற்று எட்டாவது தினமாக இடம்பெற்றது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சக்திப் பேரணி நேற்று எட்டாவது நாளாக இடம் பெற்றது.

நேற்றைய பேரணி பேருவளையில் இருந்து ஆரம்பமாகியது.

வாழ்க்கைச் செலவை குறைத்தல், சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைவில் நிவாரணங்களை வழங்குதல், சனாதிபதித் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வற்புறுத்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த மக்கள் சக்திப் பேரணி ஐக்கிய தேசியக் கட்சி நடத்துகின்றது.

நேற்றை மக்கள் சக்திப் பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கொழும்பிற்குள் ஊடுருவியுள்ள புலிகளை பிடிக்க முடியாத நிலையில் பொலிசார்

கொழும்பிற்குள் பிரவேசித்துள்ள விடுதலைப் புலிகளின் 154 உறுப்பினர்களைக் கைது செய்ய முடியாத நிலையில் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் இருப்பதாக கொழும்பு நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பிற்குள் பிரவேசித்துள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் குறித்து சகல தகவல்களையும் கண்டறிந்துள்ள போதிலும் யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய எந்தவொரு விடுதலைப்புலி உறுப்பினரையும் கைது செய்ய முடியாத நிலையிருப்பதனால் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாக்குதல்களை நடத்துவதற்காகவும், உளவு பார்ப்பதற்காகவும் கொழும்பிற்குள் பிரவேசித்துள்ள 154 விடுதலைப்புலி உறுப்பினர்கள் பற்றிய அனைத்துத் தகவல்களையும் புலனாய்வுத்துறையினர் சேகரித்துள்ளனர்.

எனினும் இவர்களுக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்த முடியாமல் இருப்பதனால் அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்த முடியாமல் இருப்பதாக புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேரினவாத சக்திகளுக்கு துணைபோகின்றனர்

**கூட்டமைப்பு பா.உ. ஜோசப் பரராஜசிங்கம் சாடல்**

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குவதற்கான சட்ட மூலம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட வேளையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை தவிர்ந்த ஏனைய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றில் சமுகமளிக்காமல் இருந்தமை கவலையை ஏற்படுத்தியுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தனது விசனத்தையும், கவலையையும் வெளியிட்டுள்ள ஜோசப்பரராஜசிங்கம் மேலும் தெரிவித்ததாவது;

தென்னிலங்கையில் பேரினவாத அரசியல் சக்திகளை திருப்திப்படுத்தும் நோக்குடன் தமிழர் என்று தன்னை மறந்து போன நிலையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குவதற்கான சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்த வேளையில் பேரினவாத அரசியல் சக்திகள் அனைத்தும் கட்சிபேதமின்றி ஒன்றுபட்டும், அதற்கு சார்பாக இருக்க தமது சுய நலநோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்காக செயற்படும் ஒரு சில தமிழர்களும் ஆதரித்து வாக்களித்தனர்.

ஆனால் தமிழ் மக்களின் ஐக்கியம் ஒருமைப்பாடு பற்றி உரத்துக் குரல் கொடுப்பதாக வெளியுலகிற்கு காட்டிக்கொள்ளும் சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய தினம் ஒதுங்கிக் கொண்டமை வேதனைக்குரியதாகும் எனவும் தெரிவித்தார்.

# அரச படைகள் மனித உரிமையை மீறியமையாலேயே நவாலியில் அப்பாவிகள் அநியாயமாக உயிரிழந்தனர்

**–நவாலி படுகொலை நிகழ்வில் வண. பிதா தோமஸ் சௌந்தரநாயகம்**

இலங்கை அரசபடைகள் அப்பட்டமாக மனித உரிமைகளை மீறியமையாலேயே நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நூற்றுக்கும் அதிகமான அப்பாவிகள் அநியாயமாக உயிரிழக்க வேண்டியேற்பட்டது.இன்று அவர்களைப் பிரிந்து பத்து வருடங்களைக் கடந்துவிட்ட போதும், அவர்களது உறவுகளிற்கு ஆறுதல்களைக் கூற இன்றும் முடியாதிருக் கிறது என யாழ். ஆயர் அதி. வணக்கத்திற்குரிய தோமஸ் சௌந் தரநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

நவாலித் தாக்குதலில் பலியானவர்களின் திருப்பலிப் பூசையில் கலந்துகொண்டு யாழ். ஆயர் அங்கு மேலும் உரையாற்றுகையில், போர் நடைமுறைகள் தொடர்பான ஜெனீவா ஒப்பந்தத்தில் இலங்கை உள்ளிட்ட அனைத்து நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன. அவ்வொப்பந்த பிரகாரம் வைத்திய சாலைகள், பாடசாலைகள் மற்றும் தேவாலயங்கள் மீது படைகள் தாக்குதல் நடாத்தக் கூடாதென்று உள்ளது. ஆனால் இலங்கை அரசும், அதன் படைகளும் அதனை அப்பட்டமாக மீறி குண்டுகளை வீசி அப்பாவி மக்களைக் கொன்றுள்ளன என்றார்.

# சுனாமி பொதுக்கட்டமைப்பை விரைவாக நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராய்வு

(லண்டன்)

சுனாமி பொதுகட்டமைப்பை எவ்வளவு விரைவில் நடைமுறைப்படுத்த இயலுமோ அவ்வளவு விரைவில் செயற்படுத்த தேவையான நிர்வாக அலகுகள் பற்றி ஆராய்ந்து கொண்டிருப்பதாக சிறிலங்கா சனாதிபதியின் செயலாளர் கருணாரத்ன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இக் கட்டமைப்புக்குத் தேவையான நிதியினை எப்படி விநியோகிப்பது என்பது பற்றி இலங்கையின் கொடையாளி நாடுகள் இலங்கை நிதி அமைச்சு பிரதிநிதிகளுடன் விவாதித்துக் கொண்டிருக்கின்றோம். இந்த நிதியை செலவிடும் முறை வெளிப்படையாக தெரியவேண்டும், எவற்றுக்காக செலவிடப்படுகிறது என்பதுக்கு பதில் கூறியாக வேண்டும் என்பதையே கவனத்தில் கொண்டு விவாதிக்கிறோம்.

இச் சுனாமி பொதுக்கட்டமைப்பிற்கு அரசு தன்னுடைய பிரதிநிதிகளை கூடிய விரைவில் அறிவிக்கும். இதுவரை விடுதலைப்புலிகளுடன் இவ்விடயம் பற்றி நாம் பேசவில்லை எங்கள் அறிவிப்பு வந்த பின் விடுதலைப்புலிகள் தங்கள் பிரதிநிதிகளை அறிவிக்கலாம் என நினைக்கிறேன் என்று கருணாரத்ன தெரிவித்தார்.

# அடுத்த வருடமே சனாதிபதித் தேர்தல்; அமைச்சரவைப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே நடாத்தப்படுமென அமைச்சரவையின் பேச்சாளர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு சட்டத்திற்கமைய சனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் நவம்பர் மாதமளவிலேயே நடத்தப்படும். ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் சக்தி பேரணியை நடத்துகின்றது என்பதற்காக அரசியலமைப்புக்கு விரோதமாக இவ்வருடம் தேர்தலை நடத்த முடியாது என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவையின் பேச்சாளருமான நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அமைச்சர், சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெற்றது. சனாதிபதித் தேர்தலை அடுத்த வருடமே நடத்துவது என அங்கு தீர்மானிக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு சனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட சனாதிபதி 12 வருடங்கள் சனாதிபதியாக இருக்க முடியும். சத்திய பிரமாணம் குறித்து அரசியலமைப்பு சட்டத்தில் எதுவும் கூறப்படவில்லை. அடுத்த சனாதிபதித் தேர்தலை எப்படி எதிர்கொள்வதென்பது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உரிய காலத்தில் சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார்? என்பது அறிவிக்கப்படும் அத்துடன் ஐ.தே.க. வேட்பாளரையும் நிச்சயம் தோற்கடிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (32)

## மத்திய...

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் இவர்கள் நால்வரும் கம்பளை கட்டுஹித்துல்ல பிரதேசத்தில் பள்ளிவாசலுக்கு சென்று திரும்பும் வழியிலேயே கடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் கடத்தப்படுவதற்கு முன்னர் பொலிஸ் அதிகாரிகள் சிலருடன் வீதியில் கதைத்துக்கொண்டிருந்ததைக் கண்டதாக இந்தச் சம்பவம் இடம்பெற்ற வேளையில் அதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## தமிழீழ...

பொலிஸ் மற்றும் புலனாய்வாளர்களுடன் இணைந்து கண்காணித்து வந்து ள்ளனர். அம்பாறைக்கு முற்றிலும் புதியவர்களான இப் புலனாய்வாளர்கள் அரசியல் பிரமுகர்கள் பயன்படுத்தும் வாகனங்களிலேயே உலாவுகின்றனர். இவ்வாறு வரும் புலனாய்வாளர்கள் அண்மை நாட்களில் அங்கு தங்கியுள்ளவர்கள் [illegible] விபரங்களைத் திரட்டி வந்த [illegible] தெரியவருகின்றது. நேற்று முன்தினம் இரவு குறித்த செய்தியாளர் தங்கியிருந்த வீட்டிற்கு சிலர் சென்று கொச்சைத் தமிழில் பேசி, தம்மைகருணா குழுவைச் சேர்ந்தவர்களென்றும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை கொலை செய்யப் போவதாகவும் கூறியவர்களே வெற்றிக்குமாரினை கடத்திச் செல்ல முற்பட்டனர். இதில் இருந்து வெற்றிக்குமார் தப்பியதை அடுத்து அங்கிருந்த இன்னொரு இளைஞரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுத் தப்பியுள்ளனர்.

## சந்திரிகாவின்...

அவர்கள் கொடுத்த வாக்குறுதிகள் எல்லாவற்றையும் மறந்துவிட்டனர்.இன்று மக்களின் பிரச்சினை கள் குறித்து அவர்கள் எதுவும் பேசு வதில்லை.

அரசாங்கம் மக்களின் அடிப்படை உரிமையான வாழும் உரிமையை மறந்து அதிகாரத்தில் இருக்கவே விரும்புகின்றனர்.

அவ்வாறான அரசாங்கத்திற்கு எதிராக மக்களின் பலத்தைப் பிரயோகிப்பது நியாயமானது என நினைக்கின்றேன்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் கரையோரத்தில் இருந்து நூறு மீற்றர் எல்லை வரையறையினை 24 மணித்தியாலங்களுக்குள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஓமந்தை...

பொறுமையாக இருக்க வேண்டும் என்றார்.

ஓமந்தை புத்தர் சிலை விவகாரத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலையிடாமல் இருந்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் ஏ-9 சாலையை வழி மறித்துப் போராட்டம் நடாத்த உள்ளோம். அதன் போது எமது உயிர் பறிக்கப்படும் சந்தர்ப்பம் கூட நிகழலாம். அவ்வாறு நிகழ்ந்தாலும் நாம் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் அவ்வாறான சம்பவங்களுக்கு இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவே பொறுப்பேற்க வேண்டும் என்று எச்சரித்துள்ளனர். (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது